விருத்த கிரீஸ்வரீம் விருத்தபால நாயகி தேவீம் பஜே, பஞ்சேஸ்வரீம் பஞ்சதேவீம் பஜே, கபடேஸ்வரீம் கபடநாயகி தேவீம் பஜே, லிங்கேஸ்வரீம் பர்வதாவர்தனி லிங்கதேவீம் பஜே, பௌதேஸ்வரீம் பௌத்த தேவீம் பஜே, பாமேஸ்வரீம் பார்வதி தேவீம் பஜே, கௌதேஸ்வரீம் கௌத பிரபு நாயகிதேவீம் பஜே, சுந்தரேஸ்வரீம் மீனாக்ஷி தேவீம்பஜே, சதாசிவஸ்வரூப தேவீம்பஜே, சாம்பசதாசிவ தேவீம் பஜே, சதா சாம்பசிவ சிவஸ்வரூப தேவீம் பஜே, நாத தேவீம் பஜே, ரூபதேவீம் பஜே, ஆத்ம தேவீம் பஜே, மஹாலிங்க தேவீம் பஜே, மஹா சிவ தேவீம்பஜே, சீதேவி, பூதேவி, கங்கா தேவி பாரத தேவீம் பஜே, மனோன்மணி சத்தி தேவீம் பஜே, சத்திய தேவீம் பஜே, மாயாகுண்டலிதேவீம் பஜே, கிரியாமதுமதி தேவீம் பஜே, தேவீம், சிவாம், சாம்பவீம், விஜய ஜய, பகவதீம், தேவீம் பஜே; காளி கலாமலினி தேவீம் பஜே, சத்தி சங்கர வல்ல திரிநயன தேவீம் பஜே, வாக்வாதி, பைரவி தேவீம் பஜே, இரிங்காரி. திரிபுரா தேவீம் பஜே, பராபரமயீ மாதா குமாரி தய தேவீம் பஜே, பத்மாக்ஷமாலாம் அபயோரு ஹஸ்தாம். சாமாங்க நேத்ராம் திரிய சுந்தராட்யாம். கிரீடிகாம்பாம் திரனேந்து நயனும். ஸ்ரீகாம கோஷ்டம் சிவசத்தி தேவீம் பஜே. சங்கரநாராயணீம் சங்கரீம் கௌரீம். சிங்கார ஆராதரீம் கிரி சுதாம், ஸ்ரீகைலாச நிவாசினீம்தேவீம் பஜே. அனுதினம் அதிகாலையில் சத்திதேவியை நினைத்து துதித்து தியானித்து ஜபித்து செய்வாய் பூஜை. மனம் மஹானந்தம் கொண்டு கருத்துக்கிசைந்த காரியசித்தி பெறுவாய். சத்திய தர்ம ஜீவகாருண்ணிய திவ்விய பக்த மங்கள சத்தியவாக்கு ஓங்கார சத்தி மெஞ்ஞான அறிவு தனலாபசாந்தகுண பஞ்சாக்ஷர சடாக்ஷர சர்வ ஜீவசத்தி மானிட நெஞ்சே.

உ

14. ஓம் சிவாயநம: ஓம் சிவாயநம: ஓம் சிவாயநம:

ஓம் மீனாட்சியைநம: ஓம் சர்வமோஹின்யைநம:

ஓம் சிவ்காமசுந்தரியைநம:

ஸ்ரீமீனாக்ஷிதேவி தியானம்.

தங்கமயமாயிருக்கும் அழகிய ஈசனுக்கு அளவற்றபிரிய நாயகி ஸ்ரீமீனாக்ஷிதேவி, பாண்டியன் மகள் நீயே. தாமரை முகம் மோக்ஷகரையாயிருக்கும், வேதவாக்குத்தாய் நீயே. தங்கரத்தின மணிகளால் ஜோதிப்பிரகாசமானகிரீடம்பெற்ற சத்தியதேவி நீயே. சதா எவ்வர்ணம், இளம்பருவம் கொண்ட மீனரேகை, கண்ணும் யெல்லா ஜீவாத்மாவுக்கு கிருபை பார்வைபார்க்கும் ஞானதேவி நீயே. வித்வத்தன்மை பொருந்திய அச்சரரூபி நீயே. மதுரைக்குத் தாயாயிருக்கும் கௌரீதேவி நீயே. வேதத்தால் வர்ணிக்கப்பட்ட கதம்ப ஜாதி புஷ்பங்களால் சுகமுகமும், சதாசாஸ்திர கவனமுள்ள சத்திதேவி நீயே. வேதத்தின் முடிவு அறிந்த தாமரைக்கண்தேவி நீயே. ஓம் என்ற, ஓங்காரத்தில் உதித்த, இரத்தினமணியுடன் வசிய பிரகாச, சர்வமந்திர பிரகாசமுடன் மந்திர ஸ்வரூபியாயும் ஆனந்தஞான உலகத்தாய் நீயே. ஆகாய நடுவில் நின்ற மேலான அழகிய, அளவற்ற பலம் பொருந்திய, மழுங்காத, சந்திரப்பிரகாச முகமும், அலங்கார ஒலிப்பிரகாச கழுத்தும், திரும்பாமல் பார்க்கக் கூடிய அகல நீண்ட கண்ணும், வேதவாக்கு சாந்தமுகமும், கஸ்தூரி திலகம், வாசனை திரவியமுடைய பர்வதகுமாரியாயும், லஜ்ஜையற்ற மாயாசத்தியும் லெக்ஷுமீகடாக்ஷம் பொருந்திய, செய்கையும் அழகுள்ள தேவிநீயே. வேதத்தாயை, பாதசரங்களால் அலங்கரிக்கப்பட்ட விரல்களுடைய பாதங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். ரம்பைபோன்ற சூரியப்பிரகாசம், நாபிமுதல் தேகமுழுவதும் இருதயத்தில் வசித்து ஞானம்தந்து சர்வதுக்க நிவர்த்திசெய்து சுகம் தரும் ஸ்ரீமீனாக்ஷி தாயை, பாண்டியன் குமாரியை சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறேன். சண்பகவல்லி யம்புஜம், ஜபங்களால் அலங்கரிக்கப்பட்ட அக்கினி ஜுவாலா நடுவிலிருக்கும், வரத்தால்

வந்த சந்திரனுடைய ஒளிபோன்ற ஞானம்கொண்டு, ஆபத்து பாப கருமங்களைப்போக்க சிரேஷ்டமான சர்வசத்திவல்லமை,சத்திதேவியின் புஷ்பநிறம்போல் இருக்கின்ற வேதத்தாயின் உடலுக்கு சாஷ்டாங்கநமஸ்காரம் செய்கிறேன். சூரிய, சந்திர, பிறை அழகிய, விவேக விசேஷம் பொருந்திய தேவிகளால் சேவிக்கப்படும் ஜெகன் மாதா நீயே. அநேகவித ரத்தினம் சுவர்ணம் மாலைகளால்பொருந்திய லக்ஷ்மி கடாக்ஷதேவி நீயே. ஜன்ம விடுதலைசெய்யும் அக்கினி ஜுவாலையோடுகூடிய கௌரீ அம்பாள் பாதாரவிந்தம் அடித்தாமரை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். உன்னை சதா தியானிக்கும் பக்தன்வீட்டில் லக்ஷ்மிதேவி அனுதினமும் வசிக்கிறுள். சரஸ்வதி இருதயத்தில் வசிக்கிறுள். ஞானத்தில் சத்திதேவிவசிக்கிறுள். பேசிய வாக்கு பலிக்கும். சுகஜீவியாயிருப்பான். ஞாபக சக்தி ஞானசக்தி, சித்தா சக்தி, சித்திபெறுவான். தனலக்ஷ்மி நிறைந்திருப்பாள். காரியம் ஜெயம் பெறுவான். ஞானம் சதா சிந்தனை கடவுளை தியானித்துக்கொண்டு முக்தி மோக்ஷப்பதவி நிச்ஷயமாய் பெறுவான். உண்மைகொண்டு எங்கும் நிறைந்திருக்கும் சர்வ வல்லமை சத்தி ஸ்ரீமீனுக்ஷி தேவியை துணைகொண்ட சத்திய ஓங்கார வாக்கு நெஞ்சே. இரவும் பகலும் ஸ்ரீ மதுரேஸ்வரி மீனுக்ஷி தேவியை நினைத்து துதித்து தியானித்து, ஜபித்து, பக்தியுடன் பூஜை செய்து, மனம் மஹானந்தம் கொண்டு உய்வாய் சத்திய உக்கிரவீர சர்வ வல்லமை சத்திதேவி சுத்த ஞான அறிவு சத்திய சாந்தகுண திவ்வியமங்கள பக்த கௌரீ சத்தி, பத்தி, சத்திய சதா சுகானந்த நெஞ்சே.

ஓம் தத் ஸத்.

15. ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் ஜகத் குரவே நம: ஓம் ஹராய நம: ஓம் பரமேஸ்வராய நம:

சிதம்பர நடராஜபதி தியானம்.

கருணைக் கடலாப் விளங்கும் தயாளகுண பிர்மானந்தம் நீயே. ஞானக்கண் ஜடை தரித்த, சுவாசம் அடக்கிய யோகி நீயே. வலபாகம் பார்வதியுடன் சதாமங்களமாயிருக்கும் சிவ ஜோதி நீயே. அந்தரமுகமாயிருக்கும் அக்கினி ஜுவாலா பொன்

னம்பலம் ஈசன் நீயே. ஜீவாத்மா இருதயத்தில் பாபத்தை போக்கும் வல்லமை சத்தி தெய்வம் நீயே. பதினாங்கு லோகமும் அடக்கிக் காப்பாற்றி சர்வ ஜீவனுக்கும் படிஅளக்கும் கடவுள் நீயே. உக்கிர ரூபசிவகாமவல்லி நடனசத்தியுடன் நடனம் செய்த சத்தி வல்லபன் நீயே. நடன ஞானத்தால் அங்கவஸ்திரம் இழந்து சோகம் கொண்ட கபடபதி நீயே. சர்வ ஜீவாத்மாவுக்கு தரிசனம் காட்டி உண்மை ஞானம் தரும்அறிவு நீயே. எங்கும் சிவலிங்கமாயும், நடராஜபதியாய் நிறைந்து இருக்கும் தெய்வம் நீயே. வன்னிமரத்தடியில் சயனித்து இருக்கும் ஜோதி ஸ்வரூபன் நீயே. எங்கும் நிறைந்து கண்பிரகாசம் தரும் நடன லிங்கம், நடேஸ்வரர், நடனபதி, நடராஜபதி, நடனமணி, நடனநாதமணி, நடனரூப மணி, நடன ஆத்ம மஹா தேவா ஜோதி நீயே. ஜெகத்குருமணி, சற்குருமணியை மறவாமல் நினைத்து துதித்து தியானித்து, ஜபித்து, பக்தியாய் பூஜை செய்து சுருத்துக்கிசைந்த காரியசித்தி பெறுவாய். மனசஞ்சலம் போக்கி, தனலாப, புத்திர சந்தானம் சர்வ சுகானந்தம் பெறுவாய். சத்திய குருபக்தி திவ்விய பக்த மெய்ஞான அறிவு இல்லற இன்பசுக ஆருத்திரா தரிசன ஆனந்த நெஞ்சே.

ஆனி திருமஞ்சன ஆருத்திரா தரிசனம்

16. ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம:

ஓம் ஜடாதராயநம: ஓம் ஸ்ரீகண்டாய நம: ஓம் கைலாசவாஸினே நம:

சதா பொருமையுடன் சாந்தமாயிருக்கும் சற்குருவே சிவகுருவே. சிவந்த பளபளப்பு மிகுந்த குருவே. சிவந்த ஜோதியே படிஅளக்கும் கடவுளே. சந்திர ஜோதியுள்ள ஜடாதரனே, சம்மார சூலாயுதனே. விஷ்ணுவல்லபனே. பார்வதி நாதனே தொண்டருக்குத் தொண்டராயுள்ள தயாளகுண கருணைக் கடலே. நீலகண்ட மூவ்வுலக ஜோதியே நஞ்சுண்ட கைலாச வாசனே. பயமற்ற வீரவல்லப ருத்திர ஞானக்கண் ஜோதியே. நாக ஆபரண ரிஷப வாகனனே. சாமவேததாரகமந்திர சங்கீதப் பிரி

யனே. சூரிய சந்திரக்கண் தங்கத்திருநீறு பளபளப்பு ஜோதி ஒரு முகனே, பஞ்சமுகனே, அரூபனே, விசுவரூபனே எமனை ஜெயித்த மலைவாசனே, சாலகிராம் ஜோதியாய் விளங்கும் நாகரத்தின வைர மணியே சத்தி வல்லப சுத்தமணியே. அக்கினி மயமாய் விளங்கும் அக்கினி ஜுவாலா ஓங்கார கம்பீரனே, உக்கிர ரூபனே உண்மை யுள்ள மோக சோக ராகதாள சங்கீத கான நடனமணி கண்மணி யே, கண்ணே, கண்ணில் கலந்து நின்ற கருமணியே கனிந்த நறுங் கனியே. பழுத்த செங்கனியே. சீனி கற்கண்டே, தேனே அமுதே அமுதின் சாறமே. எங்கும் நிறைந்த ஜோதியே அடியேன் உள்ளத்தில் உள்ளேயிருக்கும் உயிர் பக்தி ஞானமெல் லாம் நீயே எடுத்துக்கொண்டுபோய், எனக்குயென்றும் அழியாத அங்க உடல் உயிர் ஆவி கொடுத்து என்றைக்கும் உன்னை மறவா மல் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பூஜைசெய்ய ஆசை யாயிருக்கிறேன், என் சுந்தரமணியே. கும்பமணியே, நடன மணியே, நாகமணியே. மஹா மக விஸ்வமணியே. வேதமணி, விருத்தமணி பஞ்சமணியே, கபடமணி லிங்கமணியே, பௌத மணியே, பரம ஐதிக சோமமணியே, சந்திர சேகரமணி, கௌத ஜோதி மணியே. சுந்தர சதாசிவ ஸ்வரூபமணி, சாம்ப சதாசிவ மணியே, நாதரூப ஆத்மமணியே, மஹா சிவலிங்க மஹா தேவகுரு மணியே. பொருமையுடன் தில்லையில் ஆனந்த தாண்டவமாடும் ஆனிதிருமஞ்சன ஆருத்திராதரிசன பொன்ரூப நடராஜ சிவமணி யை சுத்த நடனம் புரியும் சர்வ சத்தி சித்தசிகாமணியை, திவ்விய மங்களமணியை, நடேஸ்வரரை நடராஜபதியை, நடனமணியை, நடனபதியை, கிண்கிணி ததிகிண தோம் மெனத் தாண்டவம் ஆடிய சிதம்பரவாசனே, கைலாசனே, சர்வ தீர்த்த அபிஷேக ஆனந்தனே, சர்வ பூஜா பூஷனைபெற்ற ஓங்காரமுதல் கடவுளே, சதா திருவிளக்கு ஜோதியுடன் சர்வ கற்பூர தீப ஆருதனை பெற்று பக்தனை காத்தருளும், சிவபதியை மறவாமல் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜை செய்வாய் மனமே. ஞாபக சக்தி, ஞான சித்தி, சித்நா சத்தி சித்தி தரும் சிவஜோதிப் பிரபுவை துணைகொண்ட திவ்விய பக்த மங்கள நெஞ்சே.

ஓம் சிவ சாந்தி.

ஓம் தத் ஸத்.

ஓம் ஸ்ரீ தெக்ஷிணாமூர்த்தி தியானம்.

17. ஓம் சிவாயநம: ஓம் சிவாயநம: ஓம் நமசிவாய நம: ஓம் லோக குரவே நம: ஓம் ப்ராணாதாராய நம: ஓம்ஸர்வேஸ்வராய நம:

அஞ்ஞானம் போக்கி ஞானம் தரும் சுத்தப் பிரகாச அழகு மிகுந்த முகாரவிந்த ஜோதி நீயே. வர்ணிக்கத்தக்க பூஞ்சோலையின் நூறுமடங்கு அழகுள்ள தேஜோமயம் ஆத்ம ஸ்வ ரூபி நீயே. ஒரே பார்வை ஒரே புத்தி ஒரே ஞானநிஷ்டை சதா ஞான சிந்தனை ஆலிலை ஆசனம் கொண்ட கருணாமூர்த்தி தெக்ஷணா மூர்த்தி தெய்வம் நீயே. ஆலிலையில் மிதக்கும் சமயம், பூமியிலி ருக்கும் சர்வமுனி ஜனங்களுக்கும் ஞானம் தரும் சத்திய தெய்வம் நீயே. பூலோக ஜனனமரண துக்கம் கண்டிக்கும், ஜெகத் குரு வாய் இருக்கும் தெக்ஷிணாமூர்த்தி, பாதாரவிந்தம் போற்றி போற்றி சுத்த பிரமஞானம் அறியச்செய்யும் கடவுள் நீயே. சதா ஞான நிஷ்டையில் நினைத்தால் பிரம தரிசனம் காட்டும் சுத்தபொருள் நீயே. சர்வ துக்க நிவர்த்தி செய்து இல்லற ஆசையை வெறுத்து, இந்திரிய பந்தனம் செய்யும் சத்திய குருராஜமூர்த்தி தெய்வம்நீயே. குருக்களில் சிரேஷ்டமான இராஜகுரு நீயே. உலகம் மாயாவென் னும் உடல், உயிர், ஆவி, பொருள், பந்து ஜனக்கூட்டம், மண் பொன், பெண், ஆசை, சதமல்ல என்று சத்திய ஞானம் அறிவு தந்து அறிய செய்வது நீயே. மாயா சத்தியறிந்து மௌனசாதனை தருவது நீயே. கண்ட உணவு பசி அடக்கச்செய்வது நீயே. வைராக்கியசாதனை தருவது நீயே. ஆசையே மாயா என்று அறி யச்செய்வது நீயே. எங்கு சுற்றிஅலைந்தாலும் உன்னையே தியா னித்து ஞானம் அறியச்செய்வது நீயே. சர்வ சித்தி தருவது நீயே. பதினாங்கு லோகம் ஞானம் தருவது நீயே. அஹங்காரம், சர்வம், மமதை போக்கி சாந்தகுணம் தந்து சதா கடவுள் நாமம் சொல்லச்செய்வது நீயே. ஸ்ரீபிர்மா, விஷ்ணு, சாம்ப சிவனும் நீயே. ஞானமே திருமூர்த்தி, அனுதாக்ஷகன் நீயே. எக்காரியத் திற்கும் ஒரே புத்தி, தைரியம் தருவதும் நீயே. சர்வ சித்தி தரும்

ஆயுசு விருத்தி, தனசம்பத்து தரும், பஞ்சாக்ஷர சடாக்ஷர ஜீவ சத்தி குருராஜனை தக்ஷிணாமூர்த்தி தேவனை, மறவாதே, ஞானத்தில் வைத்து, நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜை செய்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெறுவாய். கடவுள் எங்கும்பிரமமயம், ஒரே கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். பல ரூபமாய் இருக்கிறார். அறிவாய் ஞான அறிவு நெஞ்சே.

ஓம் பிரம, ஞான சூரிய சிவசாந்தி.

துர்க்கை சத்தி தியானம்

18. ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம:
ஓம் துர்க்காயை நம: ஓம் மஹாமாயாயை நம:
ஓம் மஹாலக்ஷுமி மந்திரேஸ்வரியை நம:

அசுர, துஷ்டதேவதை, சேஷ்டைகளினால் படும் ஜீவாத்மா, கஷ்டம், சர்வதுக்கம்ரோக சம்மாறி தேவிநீயே, புகையோடுகூடிய அக்கினிஜுவாலா கண்ணுடைய தாய்நீயே, உடல்வேறு, முகம் வேறு, உருவம் காட்டும், பராசத்தி தேவிநீயே, எல்லாம் தெரிந்த சர்வ, வல்லமை சத்தி தேவிநீயே, சர்வ ஜீவாத்மாவுக்கு சுத்த இரத்தம் தந்து, தைரியம், ஞாபகம், வைராக்கியசாதனை, லெக்ஷுமி கடாக்ஷம், சத்தியம், புத்திரசந்தானம், தனம், தரும்சர்வ வல்லமை சத்திநீயே, வீராதி வீரபடையை ரணகளததில் ஓரேபுத்தியுடன், தைரியமாய் எதிரிகளை தோற்கடிக்கும் வீரவல்லமை, தைரியபுத்தி தரும் ஜெயதேவிநீயே, பஞ்சபூதங்களில் வசிக்கும் பராசத்தி நீயே, முகக்குறிப்பால், பொய்யன், மெய்யன், என்று அறிவிக்கும் தைரியஞான அறிவு நீயே, இரத்தப்பசை யில்லாத, வியாதியஸ்தன், பிரக்ஞை தெரியாத பெரியரோகஸ்தன்களுக்கு ரோகசம்மாரம் செய்து, உயிர்தந்து, வியாதியஸ்தரின், பந்துஜன மக்களுக்கு சந்தோஷம் தரும் சத்திய ஞானதேவிநீயே,ஸ்திரீயின் சர்வ ரோகசம்மாரம் செய்து புத்திரசந்தானம் தரும் ஜீவகாருண்ய தர்மதேவதை தேவிநீயே, அபயம் என்றபேரை உடனே ரக்ஷிக்

கும் தயாளவேக, கைகளுடைய தாய்நீயே, நவக்கிரஹ தோஷத் தால் வாடி நொந்து, பைத்தியம் பிடித்து அலையும், உடல் உருகி உட்காரசக்தியற்று, பிணியால் வாடிக்கொண்டு இருக்கும், சர்வஜீவ, ஜந்து, தேவர், மானிடருக்கு சௌக்கியம் தரும்தாய் சத்திதேவி நீயே, சர்வ ஆயுதம்தரித்த தேவிநீயே, வரம் தரும் கருணாதேவி நீயே, சதா ஈசன் சந்நிதானத்தில் வசிக்கும், சிவசங்கரீ, துர்க்கை தேவி சுத்தியவாக்கு ஓங்காரஸ்வரூபி நீயே, எக்காரியத்திற்கும் ஜெயம்தரும் மாதா நீயே, அஹங்காரம், மமதை, கர்வம், பொய் யன், கொலை, புலையனுக்கு அக்கினிசத்தியால் உயிரைக்கவரும் வல்லமைசத்திதேவி நீயே, எல்லாக்கஷ்டதுக்கம் நிவர்த்தி செய்து மனம் மஹானந்தம் தரும் சுகதேவி நீயே, எலலாருக்கும் தாயா யிருக்கின்ற, ஹே! துர்க்காம்பிகா, சர்வ வல்லமை சத்திதேவியே, மானிடப்பிறவியாகிய நான் உன் பாதாரவிந்தம் அடித்தாமரை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். என் உடல், உயிர், ரத்தத் தில் சாந்தமாயிருந்து, சர்வ ரோகசம்மாரம் செய்து, தைரியம், வீரியம், புத்தி, ஞானம், ஞாபகம், அலங்கார லெக்ஷ்மி கடாக்ஷம், தனம் புத்திரசந்தானம், தந்து, சதாஉன்னை மறவாமல் நினைத்து துதிதது தியானித்து, ஜபித்து, பக்தியாய் பூஜைசெய்ய அருள் வரம் தருவாய் ஞாபகசத்தி ஞானசத்தி சித்தாசத்தி, சித்திசத்தி தருவாய சத்தியதேவியே உன்னை சாஷ்டாங்க நமஸ்காரம் செய் கிறேன். எங்கும் நிறைந்த சர்வ வல்லமை சத்திதேவியை துணை கொண்ட ஞானஅறிவு தைரிய புத்தி சர்வ பாக்கியம் பெற்ற சுத்த பிரம ஞான சதா சுகானந்த சாந்தகுண திவ்விய பக்தமங்கள நெஞ்சே.

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ விஷ்ணு தியானம்.

19. ஹரி ஓம் ஹ்ருஷிகேச பத்மநாப மதுஸூதந நமோ நம:
துவாரக ராஜ விஸ்வரூபா, மங்கள நந்தநந்தன, கோவிந்த,
முகுந்த, ஸ்ரீ கிருஷ்ணாய நம:

சத்திரூபா, அரூபா, காமரூபா, மோகரூபா, மோகினிரூபா, தசரூபா போற்றி, பாலகிருஷ்ணா, கம்ஸசம்மார, காளிங்க நர்த்தனா போற்றி, சோகரூபா, சொரூபா, மாயாரூபா, எங்கும் நிறைந்த தாமரைக்கண்ணா போற்றி, இருண்டமேகம் நீலவர்ணம் சதுர்புஜம் சங்குசக்கர கதாயுதா போற்றி, கீதா அமிர்தமாய் விளங்கும் யாதவ குல கண்ணா, கமலநாதா பரஞ்ஜோதியே போற்றி, கோடி சூரியப் பிரகாச ஆதிதேவா ஆனந்த திவ்விய மூர்த்தி லெக்ஷ்மி நாராயணா போற்றி, வாசுதேவா, தேவகி நந்தநாய அவதார, வெண்ணெயுண்ட வீரபுருஷா போற்றி, யாதவகுல சிரேஷ்டா, முகுந்தப்பிரியா, சத்தியபாமா ருக்மணிநாதா போற்றி, சிசுபால சம்மார, இந்திரிய பந்தனா, துளசிரூபா, விஸ்வரூபா, அர்ஜுன சாரதியே போற்றி, நரநாராயணா, பரப்ரம்ஹணே, விஷ்ணுவே, பிரஹலாதனுக்கு தரிசனம்தந்த நரசிம்ம ஹரியே போற்றி, எங்கும்நிறைந்த கோபிலீலா, ஜகந்நாதா, கடூரரூபா, பரமபுருஷா, ஜகத்குருவே, மாயாரூபா போற்றி, பீதாம்பரா, சாந்தகுண சங்கல்பா சிவதரிசனப்பிரியா, சத்து சித்து ஆனந்தா விஷ்ணுஜோதியே போற்றி, துளசி அலங்கார, பிருந்தாவனவாசா, மதுராநாதா, முப்பிரகாச ஜோதியே போற்றி, தேவர்தலைவா, நித்தியானந்த துஷ்டசம்மாரா, சர்வஜீவ ரக்ஷகா, ஆனந்தாபோற்றி, அசுரசம்மாரா, யோகிநேசா, வேதமூல மந்திரப் பொருளே, ஞானக்கண்ணா போற்றி, க்ஷீராப்தி சேஷசயனா, ஸ்ரீ வைகுண்ட நாதா, ஜீவகாருண்ய மூர்த்தியே போற்றி, வேணு சங்கீதப்பிரியா, விஸ்வேசா, அனுதரக்ஷகா, அர்ஜுனநேசா போற்றி, சர்வ ஆபரண பூஜிதா, பிரபுவே, பாபசம்மாரா, ஓங்காரரூபா போற்றி, வேதமுடிவே அசையாப் பொருளே, பாரத ரகசியா, விதுர மித்திரா, தசரூபனே போற்றி, பாண்டவர்நேசா, பாஞ்சாலி மித்திரா, பராசக்தி அண்ணா, கிருபாநிதியே போற்றி, லக்ஷ்மீ வலப்

பாகம், ரத்தின சிம்மாசன கருடவாகன விஷ்ணுவே போற்றி, விஷ்ணுவே, பரப்ரம்மனே, கமலநாதா, புண்ணியமூர்த்தியே போற்றி, வீரசோக சொர்க வைராக்கியபுருஷா, ஐயனே, திருவடி திருமலரடி பாதாரவிந்த அடித்தாமரை போற்றி போற்றி. போற்றி செய்து ஞாபகசத்தி ஞானசத்தி சித்தாசத்தி சித்தி தனம் புத்திர சந்தானம் கருத்துக்கிசைந்த காரியசித்தி பெறுவாய் வைராக்கிய சத்தியபக்த சாந்தகுண பிரமஞான ஜோதிரூப ஞானஅறிவு நெஞ்சே. ஓம் கமலநாதா தயாநிதி ஸ்ரீ கிருஷ்ணய நம: என்ற நாமம் மறவாமல் இரவிலும் பகலிலும் உணவிலும் உயிரிலும் தியானித்து ஆனந்தம் பொங்கி பெரும் ஞானம் பெறுவாய் அறிவு சுகம் தருவாய் சுத்த ஆத்ம சத்தி ஞான நெஞ்சே.

உ

ஓம் தத் ஸத்.

ஸ்ரீ ராமத்தியான ராமாயணம்.

ஹரி ஓம் நமோ நாராயணய நம:-

20. ஓம் கிருஷ்ணய நம: ஓம் விஷ்ணுவே நம: ஆஞ்சநேயாய நம:
ஓம் கருடாய நம: ஓம் லெக்ஷ்மிநாராயணய நம:
ஓம் மஹாகஜலெக்ஷ்மி பியாயம் நம: ஓம் மாதவாய நம:
ஓம் கேசவாய நம: ஓம் ரிஷிகேசாய நம:
ஓம் அச்சுதாய நம: ஓம் அனந்தாய நம:
ஓம் கோவிந்தாய நம: ஓம் முகுந்தாய நம:
ஓம் நந்த நந்தாய நமோ நம: ஸ்ரீ ராமம் பஜே.

ஸ்ரீமத்வைகுண்டநாதம், சுரமுனிமகுடம், ஜோதி சுவர்ண பீடம், நீலாங்கம்,சந்திரவக்திரம், மணியாமகுடம்,பாணகோதண்ட அஸ்தம், பத்மாக்ஷம், பாபநாசம், பிரணவமயமஹ: இரத்தின சிம்மாசனஸ்த்தம் லக்ஷ்மி வாமபாகம், ஸ்ரீதஜனவரதம் ஸ்ரீவெங்கடசம்பஜேகம் நமோ நம: ஸ்ரீ ராமம் பஜே.

சத்தியதர்ம ஜீவகாருண்ய ஸ்ரீகுமரேசர் ஞான நெறி.

ஸ்ரீராமத்தியான ராமாயணம்.

சாந்தகுண ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பாதாரவிந்தம் அடித்தாமரை போற்றி போற்றி, இருண்டமேகம் சாமளவர்ணம் சாந்த முகம் நவரத்தினக்கிரீடம் சூரியகுல ஸ்ரீமத் வைகுண்டநாதா ஸ்ரீ ராம ஸ்ரீராமச்சந்திரா ரெகுநாயகா ஹரே பரமாத்மா ஹரிராமா ஸ்ரீராமஜெயம் போற்றி போற்றி அஞ்ஞான இருள்போக்க ஞானமாய் விளங்கும் கமலக்கண் ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராம ஜெயம் போற்றி போற்றி அஜானபாகு பாணகோதண்ட அஸ்தம் தயாளதாக்ஷம் ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, பாபநாசம் பக்தஜனரக்ஷம் ஓங்காரரூபம் சாந்தகுண ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, அயோத்தி தசரத புத்திரா கோசலை பட்டக்குமாரா ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, ஜீவசத்தியாய் விளங்கி வளரும் தங்க மண்டப நவரத்தினசிம்மாசன ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராம ஜெயம் போற்றி, நித்திய யோகசதத்திய தியான உத்தமஞான சுத்த பிரம்மஸ்வரூபியாய் விளங்கும் சத்திய மஹாதப இராஜரிஷி விஸ்வாமித்திரநேசா வனவாசா யாககுண்டலபொருளே ஸ்ரீராமலெக்ஷ்மணா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி. பாலைவனமஹா சூர அசுரதாடகி சம்மார ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராம ஜெயம் போற்றி, மஹா தபஞானி ஜனகமஹாராஜன் சிவதனுசு வளைத்த சத்தியவீரா ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, ஜகன் மாதாசீதாதேவி திவ்விய மங்களகரத்தால் நாநுவித பூமாலைபோட்டு அநேகவித நமஸ்கார சர்வ பூஜாபூஷணைகளைப் பெற்ற கலியாண லெக்ஷ்மி ஜானகி மணாளா ஸ்ரீராம ஸ்ரீராமச் சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, மஹா தபரிஷி கௌதமர் கோபாவேசமாய்தன் சத்திய உத்தமபத்தினி அகல்லியாதேவியை கல்லாய்ச்சபித்த இடம் உன் திவ்விய பாதாரவிந்த அடித்தாமரை பட்டதும் சாபவிமோசனமாகி யெழுந்து உன் பாததரிசனம் கண்டு பாதபூஜை பெற்ற ஸ்ரீமத்வைகுண்டநாதா ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராஜெயம் போற்றி, சுத்தவீரர் பரசுராமர் வில் வளைத்த ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி எங்

கும் நிறைந்த ஜானகி மணாளா பூதேவி சிதேவி சீதாதேவி நாதா ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, ஜடைமுடி தரித்து சுடர்முடி வெறுத்து கைகேயி தாய்வரம் நடத்தின கோசலைபட்டக்குமாரா சத்திய தர்ம ஜீவகாருண்ய ஸ்ரீராம ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி,

கோபாஅக்கினியாய் இருந்த லெக்ஷுமணரை தர்ம நியாயத்தால் கோபத்தை அடக்கி சாந்தம் செய்த ஸ்ரீ ராமா ஸ்ரீ ராமச்சந்திரா ஸ்ரீ ராமஜெயம் போற்றி, கைகேயிதாயின் வரப்படி வனம்சென்ற சத்தியதேவனே ஸ்ரீராம ஸீதாலக்ஷுமண போற்றி ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, ஜகன்மாதா அண்ணி ஜானகியும் அண்ணன் ஸ்ரீராமரும் தம்பி லெக்ஷுமணனும் வனம்போனதைக்கேட்ட பரதன் மனம்துடித்து நொந்து ஓடிவந்து கண்டு அயோத்திக்கு அழைத்த சூரியகுல உத்தமகுண பரதாபோற்றி, சத்துருக்கண போற்றி, ஸ்ரீராமா சீதா லெக்ஷுமண போற்றி, ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, தம்பி பரதனைப்பார்த்து அகமகிழ்ச்சியாய் மெச்சி கட்டித் தழுவி உன் திருவாயால் உபசரித்த ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, தகப்பன் தசரத சக்கிரவர்த்தி உயிர் துறந்ததை பரதன் சொல்லவும் மனம்தாளாமல் கலங்கியழுது நொந்து வாடின அவதார புருஷா ஸ்ரீராம லெக்ஷுமண போற்றி, பூதேவி சிதேவி சீதாதேவி போற்றி, ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, தாய்வரப்படி பதினாலு வருஷ வனவாசம் பதினாலு நாளாய் கடத்தி வருகிறேன் என்று உன் திருவாயால் நிச்சயம் சொன்ன சத்தியவீரா வைராக்கிய புருஷா ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, தமையனைவிட்டுப் பிரிய மனமில்லாத உத்தம பரதன் தமையன் பாதரக்ஷைகொண்டு நந்திக்கிராமத்தில் பாதுகாபட்டாபிஷேகம் பண்ணி சதா ஸ்ரீராம தியானம் செய்த கியாதிபெற்ற சூரியகுல சகோதர தயாளகுண சத்திய உததம பரதாபோற்றி, பரத சத்துருக்கண போற்றி, பக்த குகன் ஓடத்திலேறி அக்கரை சென்ற ஸ்ரீராமா சிதா லெக்ஷுமண போற்றி,

ஸ்ரீ ராமத்தியான ராமாயணம். (தொடர்ச்சி.)

பஞ்சவடி ஸ்ரீ சீதா ராம லெக்ஷ்மண போற்றி, ஸ்ரீராம ஸ்ரீராமச் சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, அசுர அரக்கி சூர்ப்பனகைக்கு மூக்கறுத்து பங்கம்செய்த லெக்ஷ்மண போற்றி, ஸ்ரீசீதாராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, மாயமான் மாரீசனைக் கொன்ற ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, பர்னகசாலையும் சீதையும் காணாமையால் மனங்கலங்கியழுது நொந்து வாடின ஸ்ரீராமா லெக்ஷ்மண ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, இலங்கை அசுர அரக்கன் இராவணன் மாயாசந்நியாசி ரூபனாகவந்து ஜகன்மாதா சீதாதேவியை பர்னகசாலையோடு கவர்நது செல்லுவதைக்கண்ட ஜடாயுபக்ஷிராஜன் எதிர்த்து சண்டைசெய்து தோல்வியடைந்து உயிர்போகும் சமயம் கண்டு மனங்கலங்கி அழுது நொந்து வாடின ஸ்ரீராம லெக்ஷ்மண போற்றி, ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, ஆஞ்சநேய சுக்ரீவநேசா ஒரேபாணத்தால் வலியமரம் ஏழும் துளைத்த வாலி சம்மாரா மஹா பலவீரா ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, வானரபடை ஸ்ரீராமலெக்ஷ்மண ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, சேதுபந்தனம் செய்த ஸ்ரீராமலெக்ஷ்மண சுக்கிரீவா ஜாம்பவான் ஆஞ்சநேயா போற்றி, ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, இலங்கை எங்கும் ராமனாகி நிறைந்து சர்வ கொடிய அசுரரைக்கொன்ற மஹா பலவீரா தசமுகி இராவண சம்மாரா இலங்காராமா ஸ்ரீராமா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, ஸ்ரீராமசீதா பரதலெக்ஷ்மண சத்துருக்கன ஆஞ்சநேயா பட்டாபி ஸ்ரீராமா ஸ்ரீராஜாராம் ஸ்ரீ வெங்கடராம் ஸ்ரீ கோவிந்த முகுந்த கோபால்ராம் ஸ்ரீராகவா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி, குசலவ ஸ்ரீராமா ஸ்ரீராகவா ஸ்ரீராமையா ஸ்ரீராமநாதா ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீராமஜெயம் போற்றி போற்றி. அனுதினம் ஸ்ரீராம தியானம் மறவாமல் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பூஜை செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெறுவாய் சாந்தகுண ஸ்ரீராமரை துணைகொண்ட சத்தியஞான தனலாப நெஞ்சே கனவிலும் நினைவிலும் உணவிலும் சாந்தமாய்பேசும் ஆத்மதியான சத்தியசதானந்த ஸ்ரீராமத்தியான நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

21. ஓம் கார்த்திகேயாய நம:

ஒரு குலத்தைக்கெடுத்து துன்பம் தரும் வஞ்சகநெஞ்ச கொடுமை கொலை புலையன் தன் குடித்தனதுங்கொடியேன் தான் பிழைக்கவும் மாட்டான் பெரும்பாவியாவான். நல்லோர் அனுவளவும் சேர்க்க நம்பமாட்டான் நாயைப்போல் அலைவான் பேய்போல் விளிப்பான் புழுபோல் துடிப்பான் சூதும் வாதும் வேதனை அடைவான் அறிந்து ஒருவரையும் தீங்கு செய்யாதே நெஞ்சே. நிலத்திடை பிறந்தபலன் எங்கும் ஆனந்த ஜோதியாய் விளங்கும் ஸ்ரீஹரி ஹராதிகளை அன்புடன் பணிவாய் பாசத்தைப்போக்கி தெளிவு துணைகொண்ட சத்தியஞான நெஞ்சே.

ஸ்ரீவிஷ்ணு தியானம்.

22. ஓம் பரஞ்ஜோதிஸே நம: ஓம் தேவகிநந்தாய நம:
ஓம் லீலாமானுஷ விக்ரகாய நம:

விஷ்ணு மயமாய் விளங்கும் வீரபுருஷ வைகுண்டநாதனை அச்சுதா அனந்தா கோவிந்தனை தசரூபனை திவ்வியமங்களரூப லெக்ஷ்மிநாராயணனை பிரஹலாதனுக்கு தரிசனம் கொடுத்த நரசிம்ம ஹரியை ஓங்காரஸ்வரூபனை க்ஷீராப்தி சேஷசயனராய் ஆனந்தமாய்ப்பள்ளிகொண்டு அருள் தரும் ஸ்ரீரெங்கா சாரங்கா கோவிந்தராஜனை பக்தனைப்பாதுகாக்க நின்று அருள் புரியும் சங்கு சக்கரபாணியாய் விளங்கும் பரமபுருஷன் திருப்பதி பிரசன்ன வெங்கடேச சீனிவாச வேதநாராயண வரதராஜசுந்தர அழகர் பெருமாளாகவும் பொருமை சாந்தம் துணைகொண்ட ஸ்ரீராம சீதா பரத லெக்ஷ்மண சத்துருக்கன ஆஞ்சநேயராய் விளங்கும் ஸ்ரீபட்டாபிராமனை வைராக்கிய சாதனையாய் விளங்கும் பரம புருஷன் சத்தியபாம ருக்மணிநாதனை கண்ணனை கருடவாகன கிருஷ்ண பரமாத்மாவை கலி அவதார புண்ணிய புருஷனையனுதினம் அன்புடன் சத்திய தியான புண்ணிய தருமம் செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் விஷ்ணு பக்த சிவபக்த வைராக்கிய சத்திய புருஷ ஓங்கார மெய்ஞான திவ்விய மங்கள பக்த தனலாப நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

23. ஓம் அக்கினி ஜன்மனே நம:

பொருளறியாமல் பொய்பேசி நாளைப்போக்கும் பாவியானேன் என்செய்வேன். எப்போது காண்பேன் அறியேன் உம்மை அறிய காடு மலை வனவாசம் செய்வேன் குறைவில்லா செல்வமிருந்தும் கூட ஒன்றும் வராதே தருமம் கேட்ட தயாள குணனுக்கு இல்லை என்று கடுஞ்சினமாய் பேசி யேசினேன் ஐயோ ஒன்றும் அறியாக்கொடுமை குடிகொண்டவனானேன் நான் ஏன் பிறந்தேன் சிவனே உன் திருவுள்ளம் அறியேன் அறியச்செய்வாய் சிவகாமவல்லி மணவாள மன்னவனை மறவால் தியானிப்பாய் புண்ணிய புருஷ நெஞ்சே.

ஸ்ரீ ஆஞ்சநேயர் தியானம்.

24. ஓம் உக்ராய நம: ஓம் கிருபாநிதயே நம:

ஓம் விஷ்ணு சிவ பக்தராய நம:

ஆசைக்கோ ரளவில்லை அதையடைக்க அறிவில்லை இன்பம் இருக்குமிடம் அறியேன் பெரும் சுழியாய் சுற்றுதே துன்பம் பாசம் பதருதேநெஞ்சம் ஆசை கலங்குதே மனம் என்னறிவே ஞானமே கருணைக்கடலே அன்பே குடிகொண்ட ஸ்ரீராம பக்தா இது அறியேன் எங்குதேடி கேட்பேன் தெரியேன் பசிதீர உண்டு உறங்கிததிரிகிறேன் ஹரேபரமாத்மா மலைபந்தாகக்கொண்ட மனிதசிங்கமே வானரராஜனே நெற்றியில் பகவத்ஸ்வரூபமுள்ளவனே, வஜ்ஜிராயுதத்தால கன்னத்தில் அடிபட்டவனே, அஸ்வம் போல் நீண்டமுகமுடையவனே, பஞ்சமுகனே, கையில் சிவசூலமும், வெட்டாயுதமும், கௌமோதகி, என்ற கதாயுதமுள்ள சத்திய வீரனே சிறுவயதிலிருந்து மிகவும் பக்திபுள்ள உத்தம ஞானியே தாமரை மாலையும் பீதாம்பரமும் தரித்து இருக்கும் பிராமண ஜதீக ஓங்காரரூபனே மலைபோன்ற விஸ்வரூபா பலத்தில் மிகுந்த தைரிய புருஷா வில்லைப்போல வாயு வேகமாய் லவனகடல் தாண்டி

இலங்கையழித்தவா சீதை துக்கம் நீக்கின சத்திய தூதா சிரஞ்சீவி பட்டம் பெற்றவா அசுரர்களைக் கொன்ற மஹா பலவீரா ஸ்ரீரா மரை சோகம் தீர்த்து கியாதி அடைந்த ஸ்ரீராமதூதா லெக்ஷ்மணனுக்கு உயிர்தந்த ஞானபண்டிதா அக்கினிப் பிரவேசமாகும் பரதனை ஸ்ரீராமக்ஷேமம் சொன்ன உண்மை பக்தனே, ஸ்ரீராமனை முடி சூட்டச்செய்த சீதாராம பக்தனே காரியசித்தி அடைந்த வீரஞானியே, ஸ்ரீராமதியானத்தால் தன்னை மறந்து ஞானம் பொங்கி யிருக்கும் சத்திய பக்தன் துளசிதாசனுக்கு சீதாராம தரிசனம் காட்டிய தயாள குணவாளனே, விஷ்ணு சந்நதியிலிருக்கும் வைராக்யவிஷ்ணு பக்தவீரமணியே, சிவசந்நதியிலிருக்கும் சத்திய சிவபக்த சிகாமணியே, ஸ்ரீமான் ஹனுமான் ஆஞ்சநேயரே வாரும், பாரும் காரும் மனம் மஹானந்தம் தாரும் பாசத்தைப் போக்கும் வீராதி வீரனே சத்தியஞான தியானி நீயே, என் உயிருக்குயிராய் உள்ளத்திலிருந்து காரியசித்தி செய்யும் திடபலம் இரத்தபலம் ஆத்மபலம் தெய்வபலம் துணைகொண்ட ஸ்ரீஆஞ்சநேயரை அனுதினமும் மறவாமல் அஞ்சலிசெய்து செய்து கருத்துக்கிசைந்த காரிய சித்தி தனலாபம் பெருவாய் சத்தியவிஷ்ணு சிவபக்த பிரமஞான நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞேனம்.

25. ஓம் கல்பவிருக்ஷாய நம:

சதா உன்னை நினைவிலும் உணவிலும் கனவிலும் தியானிக்கும் உண்மை பக்தனில் நான் ஒருவனன்றோ, என் இந்த ஏழையை கடுந்துயரம் கொடுத்தாய், நெஞ்சம் கலங்குதே இது உன் திருவிளையாட்டோ திருவுளச் சம்மதமோ இது நியாயமோ தருமமோ முறையோ நியாயம்தானோ ஹரியே ஹரனே கங்காதரனே சிவனே சத்தியகுரு ஸ்ரீ குமரேசரே இனிப்பொருக்கமாட்டேன் துயரம் போதும், வாரும் தரிசனம்தாரும், கவலைதீரும், பக்தனைகாரும், இருகண் பாரும்,களிகூறும், நின்னருளொளியைத்தாரும், ஆனந்தம் செய்யும், பாரும், பக்தியுள்ள பரமதயாளகுண சத்தியஞான நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

26. ஓம் விசுவரூபாய நம:

காம குரோத லோப மோக மத மாச்சரியமாய் தாயின் இருட்டறையிலிருந்துவந்த குளவியின் மிக பெரிதும் சிறியேன் கொடுமை மரம்போல் வளர்ந்தேன். உன்னையறியாத வஞ்ச நெஞ்ச புலையன்யானேன், அளக்கறியா துயர்கடலில் விழுந்தேன், துரும்பானேன் கடுமை வெறிகொண்ட பித்தனுனேன், பணத்தாசையால் உன்னை மறந்தேன், பக்தி ஞானம் அறியேன், மோகபாசத்தில் விழுந்தேன், சோகம் கொண்டேன்: நான் ஏன் பிறந்தேன், நின் கருத்தையறியேன். எங்கும் நிறைந்த ஓங்கார மந்திரமூலப் பொருளே ஹரியே ஹரனே சிவனே சங்கரனே எங்கும் ஜோதியாய் விளங்கும் கருணை குடிகொண்ட நடனசிகாமணியை நடராஜ மணியை சிவபதியை சபாபதியை அறிவாய் என் ஞானம் துணை கொண்ட நெஞ்சே.

ஸ்ரீ சிவலிங்க தியானம்.

27. ஓம் ஸங்கராய நம: ஓம் லலாடாக்ஷாய நம:

ஓம் சர்வலிங்கரூப ஜடாதராய நம:

அக்கினிமயமானஜோதியே விளக்கே சுடரே அருட்பிரகாசமே மாற்றியாப் பொன்னே பராபரனே எங்கும் நிறைந்த பொருளே என் அறிவே என்னுயிரே உறவே சுந்தரலிங்கம். கும்பலிங்கம், நடனலிங்கம், நாகலிங்கம், மகலிங்கம், விஸ்வலிங்கம், வேதலிங்கம், விருத்தலிங்கம், பஞ்சலிங்கம், கபடலிங்கம், இராமலிங்கம், பௌத்தலிங்கம், பரமலிங்கம், ஐதீகலிங்கம் சோமலிங்கம், சந்திரசேகரலிங்கம், கௌதபிரபுலிங்கம், சுந்தர சதாசிவஸ்வரூப லிங்கம், சாம்பசதாசிவலிங்கம், நாதலிங்கம், ரூபலிங்கம், ஆத்மலிங்கம், மஹாலிங்கம், மஹாசிவலிங்கம், அரூபலிங்கம், சுரூபலிங்கம், சுத்தலிங்கம், வெள்ளிமலைலிங்கம், கைலாசலிங்கம், சிவந்தஜோதி லிங்கம், மங்களலிங்கம், மஹாதேவலிங்கம், எங்கும் கைலாசபதியாய் விளங்கி சிவலிங்கமாய்த் தோன்றும் ஈசனை பொருமைருடன் பணிந்து பாசத்தைப் போக்கும் சாந்தகுண சத்தியபக்த திவ்வியமங்கள சிவஜோதிலிங்கம் துணைகொண்ட நெஞ்சே பஞ்சாக்ஷர ஓம் சிவாயநம: என்ற நாமம் மறவாதே நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

28. ஓம் குருப்பிரபவே நம:

கடன்பட்டு கலங்கி மயங்கி தியங்கி மதிகெட்டு பொய் பேசி புசித்து அலைந்து திரிந்து தூங்கி அழுது நொந்து மாயமடுவில் விழுகாதே மடநெஞ்சே. உன் அன்புள்ள ஐய்யன் அம்மன் கடவுள் திருமலரடி மறவால் அனுதினம் அஞ்சலி செய்வாய் என் ஆத்மதியான மெய்ஞான நெஞ்சே.

சூரியபகவான் தியானம்.

29. அனந்தகோடிகிரணம் தேஜோமயம் பாஸ்கரம்பக்தனு
அபயபிரதம் பக்ததாபீஷ்டாவாப்தம் தினகரம்ஜோதிர்மயம்
சங்கரம் ஜகதீசம் ஓம் ஆதித்தியாயநம:

வர்ணிக்கமுடியாத அழகுமிகுந்த பளபளப்புஜோதி நீயே, அக்கினிப்பிரகாச கையுள்ள கடவுள் நீயே, பாசம்போக்கும் அறிவு நீயே, பக்தன் பயம்போக்கி தைரியம்தரும் சத்தியதெய்வம் நீயே, இஷ்டமான வரம்தரும் கற்பகவிருக்ஷம் நீயே, இருட்டைப் போக்கி பகல்பிரகாசம் தரும் சத்திய நித்திய ஜோதி நீயே, உலக நன்மைசெய்து சர்வ ஜீவாத்மாவை காத்தருளும் ஆனந்த ஓங்காரஸ்வரூபன் அச்சுதா அனந்த கோவிந்தராஜனும் நீயே, பெரும் பாவம்போக்கி ஞானமுத்திதரும் ஜெகந்நாதன் நீயே, ஒருவர் தயவு தேடாத கொடியபாவம்போக்கும் திவ்விய மங்களஜோதி நீயே, எல்லா ஜீவாத்மாவில் பிரகாசிக்கும் ஆனந்தஞான சூரியன்நீயே, ஒரே சக்கரம் தரித்த தெய்வம் நீயே, காற்றுக்கும் ஆகாயத்திற்கும் அதிகாரி நீயே, சர்வ ஜனங்களுக்கும் பிரபு நீயே, மஹாசூரர்களான மூலமந்திரபொருளாய் விளங்கும் ஸ்ரீபிர்மா விஷ்ணு சாம்பசிவனும் நீயே, உலகநன்மைக்கு ரதம் ஏறி மூவ்வுலகம் சுற்றி பெரும்பாவம் போக்கும் ஜோதிரூபன் தேவரூபன் பிரகாசரூபன் நீயே, வெள்ளைத்தாமரை தரித்த தெய்வம் நீயே, காச்சியப்பருக்கு புத்திரனை ஆதிதேவனும் நீயே, ஜோதிர்மயமாய் விளங்கும் தினகரம் ஜோதிர்மயம் சங்கரம் ஆதித்தியம் ஜகதீசம் பகவான் ஸ்ரீமன்நாராயண ஆனந்த திவ்வியமூர்த்தி சூரியபகவான் திவ்விய பாதாரவிந்தம் அடித்தாமரை சாஷ்டாங்கநமஸ்காரம் செய்கிறேன்.

ஓம் சூர்யாய நம: என்ற திருநாமம் மறவாமல் அனுதினம் அதிகாலையில் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியுடன் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய். எங்கும் நிறைந்து கண்பிரகாசம்தரும் சத்தியஜோதியை துணைகொண்ட சத்திய மெய்ஞான திவ்விய பக்தமங்களநெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

30. ஓம் சத்து சித்து ஆனந்த ஞானஸ்வரூபாய் நம:

ஒன்றுபிழைக்க ஞானமில்லை ஒன்றுநம்ப உறுதியில்லை உலகம் மயக்கயோகி ஞானி சாமி ஜடையோன் என்ற நாமம் தாடிமீசை உருவுகொண்டு காவிவேஷம் தரித்து பொய்கொண்டு புசித்து கால் நோவ கண்ட இடம் திரிந்து ஆலயம் மடம் திண்ணை மேடையில் தங்கி காமநினைவு மோக ஆசைவந்து மதிகெட்டு இரத்தநாடி எழுப்பி பிடித்து இழுத்து, நாதம் என்ற காமம், காமமென்ற விந்து, விந்தென்ற வீரம், வீரமென்ற சுக்கிலம், கொட்டிசோக தூக்கமாய் சோம்பலுடன் தூங்கி நாள் போக்கி பாபியாகி சாகாதே அஞ்ஞானமடநெஞ்சே நித்தியம் இஷ்டகடவுளை நினைத்து துதித்து தியானித்து சத்தியபூஜைபுடன் ஜபித்து கருத்துக்கிசைந்த காரிய சித்திபெருவாய் உத்தமபக்த சத்திய பிரமஞானயோகி சாது சந்நியாசி ஞானஅறிவு துணைகொண்ட திவ்விய பக்தமங்கள நெஞ்சே.

சந்திரபகவான் தியானம்.

31. ஓம் சந்திரசேகராய நம:

சப்தசமுத்திரம் பொங்கச்செய்யும் மஹாவல்லமை உள்ள கடவுள் நீயே, பாற்கடல்பொங்கும் உருவுள்ள தெய்வம் நீயே, சதாசாம்பசிவன் கிரீடத்தில் விளங்கும் திவ்விய ஆனந்தமூர்த்தி தெய்வம் நீயே பக்தன் கேட்டவரம்தரும் அமிர்தமுள்ள சம்போ சங்கரனும் நீயே. நக்ஷத்திரஜோதியுடன் சிறுக சிறுக பூரண சந்திர உதயமாகி உலகம் நன்மைசெய்து காத்தருளும் கடவுள் நீயே, கண்குளிர ஆனந்தம்தரும் ஜகதீசம் சம்போ மகுடபூஷணம் சோமம் சசினம் சந்திரபகவானை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். ஓம் சந்திராயநம: என்ற திருநாமம் மறவால் நினைத்து தியானிப்பாய் ஆனந்த அமூர்தம் துணைகொண்ட உத்தமபக்த சாந்தகுண சத்திய நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

32. ஓம் விஸாகாய நம:

இலக்கணக்குறிப்பு அறியாத சத்தியஞானி எழுத்து பதம் விளங்கும் பொருளே குறி. இல்லறத்தில் இலக்கணம் அறிவார் சிலர், அறியாதார் பலர், இதை அறிந்து நெஞ்சே கல்வி அறியாத பெரியோரை, மூடனென்று பரிகாசம் பண்ணுதே, அறிவுள்ள நெஞ்சே. எளியாரை இகழ்ச்சிசெய்து பெருமை கொள்ளாதே, சாந்தகுணமே சாது சாந்தமே சத்தியம், சாந்தமே பொருமை இலக்கணம். இது அறிவாய் ஜகத் எங்கும் கடவுள் பிரமமயம். ஓம் தத் ஸத் ஞான அறிவு துணைகொண்ட சததிய நெஞ்சே.

சத்தி புத்திரன் மங்கள தியானம்.

33. ஓம் குமாரேசாய நம:

தாயின் கருப்பையிலிருந்து பூரண அறிவுடன் தங்கமயமாய்ப் பிறந்த செவ்வாய் நீயே, பராசத்தி பட்டகுமாரன் நீயே, மங்களம் தரும் அங்காரன் நீயே, சத்தி தாயிடம் சர்வசித்தி ஓங்கார சத்தி அதிகாரம் பெற்ற கடவுள்நீயே, பக்தன் மனதில் பொருமையுடன் கருத்துக்கிசைந்த காரியசித்தி தரும் சத்தி குமாரனை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். சத்திபுத்திரன் ஓம் குமாராய நம: என்ற திருநாமம் மறவாமல் இரவுபகலாய் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து சர்வ அபிஷேக அலங்காரத்துடன் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்திபெறுவாய் சத்தி குமாரனை துணைகொண்ட சத்தியபக்த ஓங்கார திவ்விய பக்தமங்கள நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

34. ஓம் கங்காசுதாய நம:

கனவிலும் நினைவிலும் துணையாயிருந்த தாயை, கண்ணொளி தந்த தாயை, கருத்து களிப்புசெய்த தாயை, உருவ் அழகு செய்த தாயை, உயிருக்குயிராய் உறவாய இருந்து வளர்த்த தாயை, எனக்கினிய சுகஉணவு கொடுதது பாலூட்டி வளர்த்த தாயை, வீதியில் விளையாடும் சிறியோனை வீட்டிற்கழைத்த தாயை, சத்திய ஞான சித்திஅளித்த அம்மையை மறவாமல் அனுதினம் அஞ்சலி செய்வாய் மாதா பிதா குரு தெய்வ பக்த சத்திய ஞான நெஞ்சே.

ஞான புதன் தியானம்.

35. ஓம் வீர ஞான ஸம்பன்னாய நம:

பிரமஞான யோகி சாது சந்நியாசி பிராமணர் சர்வ பண்டித பாமரர்களால் செய்யப்படும் பூஜை, ஜபம், நிஷ்டை, தியானம், ஞானசாதனை, பக்தி, எல்லாம் அறியக்கூடிய பூரண ஞான ஜோதி நீயே, முகத்தில் விளங்கும் அருட்பிரகாசத்தால் எதிரி நாசமடையும் வீரவல்லமை ஞானி நீயே, எல்லோரால் நன்றாய் பஜித்து துதிக்கப்படும் ஞானக்கடவுள் நீயே, எல்லா ஜீவாத்மாவில் ஜோதியாய் யிருக்கும் ஞானம் நீயே, பக்தன் அறிவில் பூரண ஞான சர்வ சித்தி தரும் ஞான புதனை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். ஓம் ஞானபுதாய நம: என்ற திருநாமம் மறவாமல் அறிவில் அன்புடன் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பணிந்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் ஞான அறிவு துணைகொண்ட சத்திய ஞான நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

36. ஓம் ஸ்ரீ ஹரி ஹராய நம:

ஈன்றளித்தளிக்கும் ஸ்ரீ பிர்மா, விஷ்ணு, சதாசிவ ஸ்வரூபம், சங்கரன்பாதம் போற்றி புண்ணிய தருமம்செய் நெஞ்சே, ஈவாரை ஈயவொட்டான், இவனும் ஈயான், யெழுபிறப்பிலும் கடை பிறப்பு இவன் பிறப்பு இதை அறிந்து மோசம் போகாதே நெஞ்சே, தர்மமே தலைகாக்கும் தர்மமே ஜெயம் உன் மனமறிய அனுதினம் ஆனந்தமாய் தருமம் செய்து புசிப்பாய் என் ஜீவகாருண்ய ஈசன் துணை கொண்ட நெஞ்சே.

தேவகுரு தியானம்.

37. ஓம் இரணியவர்ண்ணாய தேவரிஷி குரவே நம:

மூவ்வுலக தேவகுரு நீயே, எல்லோரால் நன்றாய பூஜிக்கப் பட்ட தேவாம்சமும் ரிஷிஅம்சமும் உள்ள சத்தியகுரு நீயே, தங்க மயமாயிருக்கும் ஜோதி நீயே, பக்தன் மனதில் சர்வ சாஸ்திர ஞானக்கல்வி தரும் சத்தியகுரு நீயே, பேசியவாக்கு பலிக்கச் செய்யும் சத்தியவான் நீயே, தேவகுரு ஞானகுரு பிரகஸ்பதி குருவை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். ஓம் தேவகுரவே நம: யென்ற திருநாமம் மறவாமல் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி சர்வ கல்வியறிவு பெறுவாய் சத்திய குருபக்தி துணைகொண்ட ஞான அறிவு கற்பக நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

38. ஓம் மஹாமயாய நம:

பணத்தை நம்பி பிணமாகும்வரை பொய்பேசி பணம்சேர்த்து எளியாரை இகழ்ச்சிசெய்து மனம் புண்படுத்தி, உன் மனம் களிப்புடன் காலம் கழிக்காதே வஞ்சக நெஞ்சே. உன்னை விடமாட்டான் எமன். கண்டதும் துண்டமாக தண்டனைகொடுத்து உன்னை கலங்கச் செயவான் எமன். அறிந்துநீ பணமமதை அஹங்காரகர்வ வஞ்சனை தள்ளி நில்லு. ஒரு நிலை அறிந்து சாந்தமுடன் சத்திய தியானம் செய்து பாப கருமங்களைப் போக்கி உலகில் நல்லவன் என்ற நாமம் யெடு. பணத்தை நம்பி பாசம் துணை கொண்ட அஞ்ஞான மட நெஞ்சே.

அசுரகுரு தியானம்.

39. ஓம் மஹாமாயா சர்வசத்தி வல்லப ஜகத்குரவே நம:

அசுரர்களுக்கு ஜெயம் தரும் அசுரகுரு நீயே, அறிவின் சூட்சமமறிந்த ஜோதி நீயே, சர்வ சாஸ்திரங்களின் முடிவு அறிந்த ஞான குரு நீயே, பக்தன் மனதில் ஜோதியாய் விளங்கி சர்வ சாஸ்திர ஞானம், தைரியம், வீரியம், வில்வித்தைதரும் வீரபுருஷ சத்திய குரு நீயே, கருத்துக்கிசைந்த காரியசித்திதரும் அசுரகுருவை, சுக்கிராச்சாரி குருவை, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். ஓம் அசுர குரவே நம: யென்ற திருநாமம் மறவாமல் ஆத்ம சுத்தியுடன் நினைத்து, துதித்து, தியானித்து, ஜபித்து, குருபூஜை செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் சத்திய குருவை துணைகொண்ட திவ்விய மங்கள பக்த நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

40. ஓம் தேவாநாம்ச ரிஷிநாம்ச திரிலோக குரவே நம:
ஓம் ப்ரஜாபதயே நம:

காமமே கழுத்தையறுக்கும் கத்தி, காமமே கண்ணைக் கவரும் மோகம், காமமே கண்டது ஆசை தரும் சத்தி, காமமே கடவுளை மறைக்கும் பாசம், காமமே கல்வி நினையாச் செய்யும் சோகம், காமமே இரத்தம் இரக்கும் பொருள், காமமே பிணியைத்தரும் பொக்கிஷம், காமமே சண்டைதரும் கர்பகம், காமமே பெண் அடிமை செய்யும் தொழில், காமமே பல்லைக்காட்டி பித்தனைப்போல் அலைந்து திரிந்து பேசச்செய்யும் மருந்து, காமமே கடன்படச் செய்யும் பகைவன், காமமே பொருளைப் போக்கும் நண்பன், காமமே கண்ட போதையுண்டு வாயில் வந்ததை பேசச்செய்யும் பித்தன், காமமே தூங்கச்செய்யும் சோம்பல், காமமே வைத்தியனைத்தேடும் வியாதி, காமமே கண் தெரியாத குருடன், காமமே கடவுளை தூஷிக்கச் செய்யும் பாபி, காமமே புத்திரசோகம் செய்யும் மாயா, காமமே மான பங்கம் செய்யும் மன்மதன், காமமே மோகம், மோகமே சோகம், சோகமே ரதி மன்மத லீலை நினைந்து செய்து, பாப கரும சண்டாளனுகி, பெண்சாபம் பட்டு, பிரக்ஞை இல்லாத வாத பித்த ஜன்னியில் உன் உயிரை பறிகொடுத்து உன்இனத்தார் மனம் புண் செய்து நீ அழிந்து போகாதே; காமனிடம் பக்தியாய் இருந்து நினைத்து துதித்து காலம் களித்து சத்திய தியானம் செய்து காம மோக சோக சொரூபனுய் எங்கும் நிறைந்த ஹரிஹராதிகளை அறிவாய் காமம் துணைகொண்ட கர்ப்பகவிருக்ஷ ஞான நெஞ்சே.

சனேஸ்வரபகவான் தியானம்.

41. ஓம் நீலாம்பரோ நீலவடிஹி வர்தஹ தனுஷ்மான் ரவிபுத்ராய நம:

சத்திய சோதனை பார்க்க பக்தன் மனம் புண் செய்து சுகான ந்தமாயிருக்கும் ஒவ்வொரு ஜீவாத்மா உயிரில் ஸ்திரமாய் இருந்து உடலை அளிப்பதற்கு வில்லையுடைத்த நீலவர்ணமுடையவரே, நீல உடை தரித்தவரே, சூரிய குமாரனே, நான்கு கைகள் உடையவரே, வரத்தைக் கொடுக்கின்றவரே, சந்ததியுடையவரே, என் உடல், உயிர், ஆவியில் பொருமையுடன் இருந்து பக்தனை கருணை வைத்து காத்தருளும் சனேஸ்வர பகவானுக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய் கிறேன். ஓம் சனேஸ்வராய நம: யென்ற நாமம் மறவாமல் நினைத்து துதித்து தியானித்து சர்வ அபிஷேகாலங்காரத்துடன் பக்தியாய் பூஜை செய்து ஜபித்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய். சர்வ சாப, தோஷ, பாப, பீடை, கன்மம், பயம், விபாதி, திருஷ்டி, கோபம், அஹங்கார கர்வம், பந்தபாசம் போக்கும் உக்கிரவீர வைராக்கிய புருஷனைத் துணைகொண்ட புண்ணிய பக்த சாது ஞான அறிவுள்ள திவ்விய மங்கள ஓங்கார நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

42. சதா சிவஸ்வரூபம் சற்குரவே நம:

என் சற்குருவே, கற்பகமே, கண்ணே, கண்மணியே, என் மதியே, அமுதே, என் தேவே, உன்னை மறக்க மனம் இல்லையே, எங்கு சென்றாலும் உன்நினைவு உள்ளம் உருக்குதே, ஐயனே, மெய் யனே, உன்னை மறந்திடுவேனு மறக்கமாட்டேன், மறப்பறியேன், உன் சோதனையறியேன், உன்னை மறந்து உலகில் இருக்கவும் மாட் டேன், உயிர் விடுவேன், என்னை நீமறந்தால் நான் என் செய்வேன் என் குருவே, தாயும் நீ, தந்தையும் நீ, அருளும் நீ, பொருளும் நீ, பெண்ணும் நீ, ஆணும் நீ, தோழனும் நீ, இனத்தாரும்நீ, எல்லாம் கொண்ட இறைவன் நீயே, என்னை மறக்காமல் ஞாபகசக்தி ஞான சித்தி சித்தா சத்தி சித்திகொடுத்தருளும் பொழுதே சத்தியகுரு ஸ்ரீ குமரேசர் பாதம் பணிவாய் திவ்விய பக்தமங்கள நெஞ்சே.

ராகு, கேது, தியானம்.

43. மஹாவீரியம் கோஹோரம் ஓம் ராகவே நம: ஓம் கேதவே நம:

சிம்மலக்கினத்தில் பிறந்த மஹாவீர பலவான், ராகு தேவன் சூரிய சந்திரனை விழுங்கும் வீரன், பக்தனிடத்தில் பொருமையுடனிருந்து மஹாவீரபலம் தைரியம் கொடுதது காரியசித்தி செய்யும் ராகுவை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். கோர சொரூபியாயும், கோரரூபத்தில் சாந்தகுணமுடையவராயும், கோரரூபமான கேது பக்தன் மனதிலிருந்து உக்கிர சக்தியுடன் காரியசித்தி செய்யும் கேதுவை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். ஓம் ராகு கேதவே நமோ நம: வென்ற நாமம் மறவாமல் அனுதினம் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பூஜை செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெறுவாய், ஓங்காரரூப ராகு கேதுவை துணைகொண்ட சாந்தகுண சத்தியபுருஷ மெய்ஞான பக்த இன்ப சுக ஆனந்த நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

44. ஓம் திரிலோககேசாய நம:

அனுதினம் ஐயன், அம்மன், திருமலரடி பணியும் ஆனந்த பரிபூரண பக்த சாது தரிசனம் வேண்டும் திவ்விய மங்களகர தியாகி, நிஜயோகி, சத்திய நித்திய தியானி, சதா ஆத்ம சொரூபி, பிரம்மஞானி, ஸ்ரீபிர்மா, விஷ்ணு, சிவசத்தி, மஹாலக்ஷ்மி, சரஸ்வதி, சத்தியதியானி, எங்கும் பொருமையுடன் தங்கும் சொல்லும் பொங்கும் ஈசனுக்கொப்பான சத்திய பக்த பாதாரவிந்தமே போற்றி, கருணையுடன் யெனையாளும் ஈசன் திருமலரடி போற்றி போற்றி புரிவாய் யென் புண்ணிய தரும சத்திய ஜீவகாருண்ய திவ்விய மங்கள நெஞ்சே.

உ

சிவமயம்.

ஓம் ஹராய நம:

45. ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம:

ஓம் உக்ராய நம: ஓம் மஹேஸ்வராய நம: ஓம் ஜகத்குரவே நம:

சிவத்தியானம்.

காத்தருளும் சிவந்த பளபளப்பு அருட்பிரகாச ஜோதியே போற்றி, சந்திரசிரசு மேகவர்ண கண்ணழகு சம்மார கர்த்தா சிவனே போற்றி, கட்க சூலாயுதா விஷ்ணுவல்லபா பார்வதி மணாளா போற்றி, தாசனுக்குத் தாசனாய் அருட் கடவுளாகி எல்லாப் பொருளாய் பிரகாசிக்கும் மூவுலக ஈசனே போற்றி, சர்வஜீவ ஜந்து மானிடப்பிறவியை தினப்படி அளக்கும் கடவுளே போற்றி, நஞ்சுண்ட உக்ரரூபா நெற்றிக்கண்ணா கங்கைதரித்த ஜடாதரனே போற்றி, காலன் என்னும் பயமற்ற வீர உக்கிர ஜோதிப் பிரகாச சதாசிவனே போற்றி, சிபிப்பிரியா ஸ்ரீகண்டாயா கையில் அழகிய மானும் கலப்பையுமுடைய முக்கண்ணா கைலாசவாசா கருணைக்கடலே போற்றி, சர்வாபரண பூஜிதா தர்ப்பாசயனம்கொண்ட முப்புற ஜோதியே போற்றி, ரிஷபவாகனா உண்மைப்புருஷா தேவகுருவே ஜகத்காரணா போற்றி, சூரியப்பிரகாசா ஞானக்கண் சதா ஞானசிந்தனா சுந்தரலிங்கம் போற்றி, முகுந்தப்பிரியா நாகசர்ப்பமாலை தரித்த நடனப்பிரியா நடேஸ்வரா போற்றி, எங்கும் கும்பஅரூபனாகயிருக்கும் கும்பலிங்க ஜோதியே போற்றி, எங்கும் நிறைந்து வெட்ட வெளியாயிருக்கும் சூரியசந்திரப் பிரகாசக்கண் அரூபா சுரூபா விஸ்வரூபா ரத்தினசபாபதியே போற்றி, ஆனந்தஸ்வரூபா பஞ்சமுகனே ஒரு முகனே நாகலிங்க ஜோதியே போற்றி, மும்மூர்த்தியாய் யாகத்தில் பிரகாசிக்கும் அமிர்த ஜோதியே போற்றி, அகண்ட பரிபூரண ஜோதிப்பிரகாச ஸ்வாசபந்தனா யோகசாதனா நாதா மஹாதேவா போற்றி, பரமாத்மா மலைவாசா மஹாகணநாதா யக்ஞமாயா சாமவேதப்பிரியா போற்றி, கடூர மஹா உக்கிர நடனசத்தி

சிவத்தியானம். (தொடர்ச்சி.)

சிவகாமவல்லி மணாளா போற்றி, கருணைத்தாய் ஸ்ரீ மீனாக்ஷிதேவி நாதா பிட்டுக்கு மண்சுமந்தவா போற்றி, திருக்கலியாண சுந்தரி மணாளா சித்ராபௌர்ணமி உற்சவநாதா ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வரா ரிஷபவாகனா சர்வாபரண பூஜிதா போற்றி, சதா புன்சிரிப்பு சாந்த குண விக்கிர ரூபா கற்பூர சர்வ தீவாராதனைப் பிரியா போற்றி, தங்கத்திருநீறு பளபளப்பு சிவந்தஜோதி விஸ்வரூபா விஸ்வலிங்கம் போற்றி, வேத சாஸ்திர புராண மூலப்பொருளே சர்வ சத்தி மணாளா வேதலிங்கம் போற்றி, பழமலைநாதா விருத்தகிரீஸ்வரா விருத்த பாலாம்பிகைநாதா போற்றி, சர்வ துக்கம் நிவர்த்தி செய யும் பாபசம்மாரா பரமதயாளா போற்றி, புண்ணிய மடு முத்தாறு திருமணி முத்தாநதி தீர்த்த அபிஷேகபூஷணா மாசிமக உற்சவ நாதா விருத்தாஜலவாசனே போற்றி, மஹாகணபதி பிதா விருத்த காசிநாதா சத்தியகிரிதேவா சாம்பசிவ ஜோதியே போற்றி, சத்திய குரு ஸ்ரீ குமரேசர் தயாளகுண ஐயனே விருத்தநாதா சதாசிவ ஸ்வரூபலிங்க ஜோதியே போற்றி, பக்தனை பாதுகார்க்கும் பரம தயாளா பழமலைநாதா மஹாதேவா போற்றி, அஞ்சாத தைரிய புத்தி சத்தியகிரி பாபசம்மாரா ஸ்ரீ குமரேசர் ஈசனே போற்றி, மலைவாசப்பிரியா நீலகண்ட ஸ்வேதகலாசன ஜோதியே போற்றி, மஹாயோகி ரூபனாய் வந்து தானம் கேட்கும் தயாளகுண சிவ யோகியே போற்றி, சைதன்னியம் வெள்ளை பளபளப்பு கங்கா தீர்த்தம் உண்டாக்கிய எங்கும் நிறைந்த ஏக நாயகா ஞானம் தந்து ஆசீர்வாதம் தந்த ஐயனே போற்றி, அன்றுமுதல் உன்னை மறவா மல் தியானிக்கச்செய்த உத்தம சிவ ஜோதியே ஹரியாகவும் ஹர னாகவும் நின்ற ஸ்ரீ குமரேசர் அடித்தாமரை போற்றி, மண்ணிலும் விண்ணிலும் சூக்ஷும சரீரமாயிருக்கும் எத்திக்கிலும் பிரகாசிக் கும் தரிசனம் தந்த ஜகத்குருவே போற்றி, உள்சுத்தமுடன் தூணி லும் துரும்பிலும் பரவியிருக்கும் பரஞ்ஜோதியே போற்றி, மலை வில்லாகக்கொண்ட பெருஞ் சேனைத்தலைவா பூதகணநாதா சங்கீதம் நிறைந்த சுத்தஞான அறிவுள்ள விஷ்ணு சிவ ஜோதியே போற்றி, அழகிய சுத்த விக்கிரம் சாலக்கிராம் பிரமம் நாகரத்தினஜீவ வைர

சிவத்தியானம். (தொடர்ச்சி.)

மணி ஜோதிப்பிரகாசசிவனே போற்றி, சாத்மீக பாசமற்ற மஹாதேவா, மஹாபலவீரா, பஞ்சலிங்கம், கட்டலிங்கம், இராமலிங்கம், பௌத்தலிங்கம், பரமலிங்கம் போற்றி, ஐதீக அலங்கார அஷ்டமூர்த்தி ஐதீக சோமசுந்தர லிங்கம் போற்றி, சதா கபடமில்லாத சுத்த தங்கக்கட்டி மணியே அக்கினிரூபா போற்றி, ஆயிரம் கண், ஞானக்கண், அதிபதியாய் விளங்கும் பார்வதிபரமேஸ்வரா சந்திரசேகர லிங்கம் போற்றி, வரத்தால் அகங்கார கர்வம் மமதையடையும் துஷ்டசம்மாரா போற்றி, தாரகமந்திரப் பிரியா அனுதாரக்ஷகா கௌதமேஸ்வரா கௌதலிங்கம் பிரபுவே போற்றி, சர்வதீர்த்தம் வாசனைததிரவிய அலங்கார சர்வ ஆபரணபூஜிதா ஸ்வாமிநாதாவேலு முருகன்பிதா சுந்தரலிங்கம் சுந்தரேஸ்வரா பராசத்தி ஸ்ரீ மீனாக்ஷி தேவி மாதா பிதா குருவேபோற்றி, சதாவிஸ்வரூபலிங்கம், சாம்பசிவலிங்கம், நாதலிங்கம், ரூபலிங்கம், மஹாலிங்கம், மஹா சிவலிங்கம், மஹாதேவலிங்கம், மஹாதேவா சர்வேஸ்வரா ஜகத்ரக்ஷகா போற்றி போற்றி, திருவடி போற்றி, திருமலரடி போற்றி, பாதாரவிந்தம் அடித்தாமரைப்பணிந்து சர்வசித்தி பெருவாய், சுகமுடனிருப்பாய், மனம் மஹா ஆனந்தம் பெருவாய், திவ்விய பக்த சத்திய ஞான மங்களரூப சிவத்தியானம் செய்த சிவபக்த சாந்தகுண உண்மை ஓங்கார நெஞ்சே.

சர்வ சத்தி தியானம்.

46. ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம:

ஓம் திரிபுராயை நம: ஓம் சிவப்ரியாயை நம:

ஓம் மஹாமனோன்மணி சத்தி ஸ்ரீ மீனாக்ஷி சிவகாம சுந்தரியை நம:

ஜோதிரூப சத்தி, பாபசம்மார சத்தி, இச்சா சத்தி, கிரியா சத்தி, சுந்தர கும்ப நடன நாகசத்தி, மஹா சத்தி, ஞான சத்தி, போற்றி போற்றி, மாயாசுந்தரி சிவப்பிரியை சர்வநீதிதேவி, அலங்கார அழகு சத்து சித்து ஆனந்ததேவி, மஹா பலவீர சத்தி சாந்த தேவி, விஸ்வவேத விருத்த பஞ்ச சத்தி போற்றி போற்றி, குண்டலத்தாய், முப்புறத்தாய், ஜயதேவி, கல்வி சரஸ்வதி தேவி உற்பவ சத்தி, கபடலிங்க பௌத்தபரமேஸ்வரி சிவசத்தி போற்றி போற்றி, நித்திய கல்யாணி சத்தி, காந்தி விஷ்ணுசத்தி, மனோன்மணிசத்தி, ஐதீக சோம சந்திரசேகர கௌதப்பிரபுசத்தி ஜெயசத்தி போற்றி போற்றி, மனோஉல்லாச எங்கும் நிரைந்த சிவசத்தி, மோகனசத்தி, பூதேவி, தேவர்மானிடருக்குத் தாயாய்இருக்கும் மஹா சிவஜோதி சத்தி போற்றி போற்றி, சிவதேவி, ஆத்மதேவி, கிருபாதேவி, உமாதேவி, மீனரேகை, தாமரைக்கண், லக்ஷ்மீகடாக்ஷம், ஸ்ரீ மீனாக்ஷிதேவி போற்றி போற்றி, நீதிசாக்ஷி சமதேவி பத்திரகாளி மஹா கிருபாசத்தி போற்றி போற்றி, கனவு சுகத்தாய் சித்ரூபி அரூபி ஆனந்த சத்தி போற்றி போற்றி, பாலச்சந்திர எவ்வர்ன அருள்வடிவு, சாந்தம், பொருமை, அடக்கம், ஆனந்த ஞானசத்தி, சுந்தர சதா சிவஸ்வரூபசத்தி போற்றி போற்றி, சுயஜோதி, குணஜோதி, சத்தியதேவி, ஞானக்கண் இந்திரஜால மாயா கண்ணுக்குத் தெரியாத மாயாகுண்டலி சத்தி போற்றி போற்றி, இன்பத்தாய் தனதேவி, முத்திதரும் பல ரூபசத்தி சொர்க்கலோகசத்தி போற்றி போற்றி, ஐஸ்வரிய அளவற்ற மாயாசத்தி, ஈசமோக சததி, சாம்ப சதாசிவசத்தி போற்றி போற்றி, ஓங்காரரூப அசுரசூர சம்மாரி, ஞான சத்திவேல் ஆறுமுகத்தாய் சர்வ ஆயுதபாணி, சத்திய சிவ சத்தி, சின்மயாசததி போற்றி போற்றி, உக்கிரவீர சத்தி, பத்திர காளி, இளம்பருவம் கொண்ட நான்குவேத ஆறுசாஸ்திர ஜோதி

சர்வ சத்தி தியானம். (தொடர்ச்சி.)

பளபளப்பு சிவசத்தி போற்றி போற்றி, ஞானபரிசோதனை நடு இரவு உக்கிர மாயா சத்தி, பக்தஜன அருள் தாய்கண் பிரகாசம் தரும் நாத ரூப ஆத்ம சத்தி போற்றி போற்றி, சங்கீத தாய் தேவ ரூபி, அரூபி, சொரூபி, விஸ்வரூபி, கங்காதேவி, தங்கநிறக் கைலை, வெள்ளிமலை சத்தி, சர்வ மஹாலிங்க சிவ சத்தி போற்றி போற்றி, எழுத்துக்கோர் அருத்தம் தரும் ஞானத்தாய் சுக்கில ஜீவ சத்தி, முத்தி ஜோதிப்பிரகாச சத்தி போற்றி போற்றி, புத்திர சந்தானம், தனம் தரும் அழியாத வஸ்து பரஞ்ஜோதி சிவலிங்கசத்தி போற்றி போற்றி, ஞானவிசாரணை செய்யும் அறிவு சத்தி, ஞாப்கசத்தி, ஞான சத்தி, சித்தாசத்தி, சித்திதரும் சிவமங்கள சிவகாமவல்லி மீனாக்ஷி சத்தி போற்றி போற்றி, பெரியநாயகி விருத்த பாலசத்தி, அநுசூயா சர்வ சிவசத்தி, சங்கராந்தி சர்வஜெய சத்தி அடித்தாமரை பாதம் போற்றி போற்றி, பஞ்சாக்ஷர சடாக்ஷர சர்வஜீவஜெய சத்தி போற்றி போற்றி, போற்றி செய்து கருத்துக்கிசைந்த காரிய சித்தி பெருவாய் சதா ஆனந்த திவ்விய பக்த மங்கள நெஞ்சே.

ஓம் சர்வசத்தி சாந்தி.

பத்திரகாளி தியானம்.

47. ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம: ஓம் சிவாய நம:

ஓம் சிவசத்தி சர்வசத்தி சிவசங்கரியை நம: ஓம் உருத்ராயை நம: ஓம் குண்டலீயைநம: ஓம் மஹாமாரியைநம: ஓம் மஹாகாளியைநம:

கண்ணுக்கு தெரியாத காதில்குண்டலியுடைய உக்கிரசத்தி தேவி நீயே, எக்காரியத்திற்கும் இன்பமானவார்த்தை தரும் சத்தியதாய் நீயே, மங்களமுள்ள ஜெயதேவியே ஜெயத்தை தரும் தாயே, ஜெயம் உண்டாக்கும் பிரகாசமுள்ளதாய் நீயே, கோர ஓங்காரரூபத்தில் புன்சிரிப்பு உள்ளதாய் நீயே, சர்வ பாபகர்மங்களைப் போக்கும் சத்தியதேவி நீயே, ஞானக்கண் பிரகாசமுக்கண் தாய் நீயே, சத்தியதேவி பார்வதிமாதா நீயே, ஓங்காரத்துடன் முப்புறத்தில் எங்கும் நிறைந்திருக்கும் ரொம்பவும் விசேஷமான தாயே

பத்திரகாளி தியானம். (தொடர்ச்சி.)

கன்னிகைப்பருவம்கொண்ட கருணைதாய் நீயே, அஷ்டாங்கயோக வாக்குதாய் நீயே, இரத்தவர்ணம் ஆடைகொண்டு கையில் சூலம் வெட்டாயுதம் சர்வாயுதம்கொண்டு சதுரங்க சேனைகளுடனிருக்கும் பராசத்திதேவிநீயே, ஜீவகாருண்ய பிரகாசத்துடன் மேல்பார்வையோடு ஞானக்கண்பார்க்கும்தாய் நீயே, முகரூப ஜோதிரூபஸ்வரூப தேவி நீயே, நடனதேவி சிவகாமவல்லியும் நீயே சர்வகாரியசித்தி தரும் சர்வசத்திதேவி நீயே, சர்வதுஷ்டசம்மாரதாய் நீயே, இமயகிரி அரசியாகியும் மகளாகியும் மும்மூர்த்திஉக்கிரரூபமுகமாயும் எல்லா ஜீவஆத்மஞானத்தில் அறிவில் இருக்கும் உக்கிரரூபி வேதவாக்கு தாய்ஜெயதேவிநீயே, சர்வ அரக்கர்படையை சம்மாரி நீயே, ஓங்காரமந்திர மூலப்பொருள் நீயே, வீரம்பொருந்திய சனேஸ்வர பகவான் கொடுமை போக்கும் தேவி நீயே, சர்வரோக சம்மாரி, புத்திரசந்தானம் கேட்டவரம் தரும் கருணைத்தாய் சதா ஞான சிந்தனைத்தாய் நீயே, ஈசன் சந்நிதானத்தில் வசிக்கும் கைலாசதேவி நீயே, ஜெகத்காரண மூலப்பொருள் நீயே, ஸ்ரீ பிர்மா விஷ்ணு சாம்பசிவன் சதா தியானிக்கும் சர்வ வல்லமை சத்தி, ஓம் மஹா மனோன்மணி தேவியும் நீயே, பதினான்கு லோகம் கிடுகிடுங்கும் ஓங்காரரூபி, அரூபி, சுயரூபி, விஸ்வரூபி, எல்லா ஜீவாத்மா நாக்கில் இருந்து அறிவை அறியச்செய்யும் ஞானம் நீயே, ஸ்ரீ குமரேசர் சற்குரு தாய் சத்திதேவி நீயே, சர்வ உக்கிர சத்திவேல்தந்த ஞான சத்தி நீயே, ஹே மாதா! மானிடப்பிறவியாகிய நான், உன் பாதாரவிந்தம் அடித்தாமரையை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். சாந்தமுடன் என் உயிரிலிருந்து கருத்துக்கிசைந்த காரியசித்தி தந்து உன்னை மறவாமல் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜைசெய்ய ஆசையாயிருக்கிறேன். கருணை வைத்து ரக்ஷித்து பேசியவாக்கு பலித்து சத்தியம் காப்பாற்றும் ஓங்காரரூப தேவிதாயே, சாந்தம் மங்களம் சிவசாந்தி எக்காரியத்திற்கும் ஜெயம்தரும் ஜெயதேவி சர்வவரம்தரும் தாயே போற்றிதிருவடி பாதம் பாதாரவிந்தம் அடித்தாமரைப்போற்றி போற்றி, ஞாபக சத்தி ஞானசத்தி சித்தாசத்தி சித்திகொடுத்து தனலாபம் தரு

வாய் தாயே, உன் உக்கிரரூபத்தில் புன்சிரிப்புக்கு வந்தனம் நமோ நம: பத்திரகாளி நமஸ்தே! உக்கிரவீர பத்திரகாளிதேவிம்பஜேகம் திடபலசத்தி ஆத்மசத்தி தெய்வசத்தி உற்சாகததுடன் பேசிய வாக்கு பலித்து சத்தியத்தைக் காப்பாற்றுங்கள். எங்கும் நிறைந்த சர்வவல்லமை சத்திதேவியை துணைகொண்ட பிரமஞானயோகி சாது சந்நியாசி சதாநந்த குருபக்தி உண்மையுள்ள ஓங்காரதிவ்விய பக்தமங்கள சத்திய வாக்கு நெஞ்சே.

சுபம் தரும் ஜெயசத்தி சாந்தி.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

48. ஓம் பரப்ரம்ஹணே நம:

சத்தியே பக்தி, பக்தியே முக்தி முக்தியே தரும் சத்திய தருமம், என் ஆத்மசத்திய தரும ஆனந்தநெஞ்சே அறிவாய், கத்தியே தள்ளு, குத்தி, அறுத்து, புசித்து வஞ்சகநெஞ்ச கொலை புலையனுகி மடியாதே, கண்டுகொள்வாய், கருணை குடிகொண்ட ஜீவகாருண்ய சத்தியதரும உத்தமபுருஷ ஞான அறிவுள்ள நெஞ்சே.

ஸ்ரீகுருஸ்வாமிகள் தியானம்.

49. ஓம் குமாரேசாய நம: ஓம் சுப்ரமண்யாய நம:

ஓம் ஞானசத்தி சற்குரவே நம:

உன் உருவம் உற்றுப்பார்த்தாலும், உள்ளம் குளிர கருணை தரும், ஞானம் படித்தாலும் பாசம் விலகும், நின்று கேட்டாலும், சொன்னாலும் ஞானம் தரும், நிஷ்டையில் நினைத்தாலும் நித்திய, சத்திய தியானஞானம் சொல்லும், கனவிலும் நினைவிலும் நினைத்தாலும் கண்குளிர தரிசனம் தெரியும். என் சற்குருவே, தண்டாயுதபாணி, வேல்முருகா, கந்தஸ்வாமி, சுவாமிநாதா, ஷண்முகா, மயில்வாகன, ஸ்ரீவள்ளி தெய்வநாயகி நாதா, சுப்பிரமணியன், ஸ்ரீகுமரேசர், குமரராஜன், சரவணபவன், குமரகுருபரன், ஆறு

ஸ்ரீகுருஸ்வாமிகள் தியானம். (தொடர்ச்சி.)

முகம், பன்னிருகையன், வடிவேல்முருகன், ஞானபண்டிதன், சத்திவேல், ஜோதிவேல், தங்கவேல், ஓங்காரவேல், பஞ்சவேல், தங்கமயமாயிருக்கும், பராசத்திப்பட்டக்குமாரன், சற்குரு, ஸ்ரீகுமரேசர், ஓங்கார ஞானஜோதி, பஞ்சகுமரவேல், சற்குரு வேலாயுதனை, ஸ்ரீகுமரேச குருஜோதியை, பக்தனை ரக்ஷித்தருளும் தயாளகுண, நித்திய சத்திய ஞானியை அறிவாய். மெய்ஞான சாந்த குண சத்திய திவ்விய பக்த ஓங்கார மங்கள மானிடநெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

50. ஓம் ஏகரூபாய நம:

உப்புஉடல் உன் உடல், தப்புஉடல் உப்பு உருகும், தப்பு அறிந்து உப்பு தள்ளு, சத்துகொண்டு, சித்தறிந்து உப்பு தள்ளு, சித்தே சத்து, சத்தேசித்து கண்டுகொள்வாய் கருணைகுடிகொண்ட பளபளப்பு, சைதன்யம், அறிவுகொண்டு காலம் கடத்தும் ஞான அறிவு என் ஆனந்த நெஞ்சே அறிவாய். ஸ்ரீபிர்மா, விஷ்ணு, நவக்கிரஹ சிவத்தியானம் செய்வாய் ஆனந்த அமிர்தம் புசிப்பாய் திவ்விய சாந்தகுண சுத்தஞான நெஞ்சே.

ஸ்ரீதண்டாயுதபாணி தியானம்.

51. ஓம் குமாராய நம:

மனப்படி நடக்கும் மஹான் மஹாயோகியன்றோ, அவருக்கும் அவனன்றியோரணுவும் அசையாதெனும் பழமொழியன்றோ, அறிந்து மறந்து திரியாதே பாசநெஞ்சே. சூதும் வாதும் சுமந்துகெட்டு அலையாதே, உள்ள உணவு உண்டு, உண்மையுடன் இருந்தால் பாசம் போக்கித் தெளிவு தரும், பாரும், பரம புருஷனை, தண்டாயுதபாணியை, சுந்தரபாணி, கும்பபாணி, நடனபாணி, நாகபாணி, மகபாணி, விஸ்வபாணி, வேதபாணி, விருத்தபாணி, பஞ்சபாணி, கபடபாணி, இராமலிங்கபாணி, பௌத்தபாணி, பரமபாணி, ஐதீகபாணி, சோமபாணி, சந்திரசேகரபாணி,

ஸ்ரீ தண்டாயுதபாணி தியானம். (தொடர்ச்சி.)

கௌதபிரபுபாணி, சுந்தரசதாசிவஸ்வரூபபாணி, சாம்பசதாசிவ பாணி, நாதரூப ஆத்மபாணி, மஹாலிங்கபாணி, மஹாசிவலிங்க பாணி, சத்திஜோதி, தங்கம் ஓங்காரபஞ்சகுமரகுரு, வேலும் மயிலும் துணைகொண்டு எங்கும் நிறைந்து பழனி குகையில் வாழும் மஹாதேவ சற்குருபாணி, சத்தியபாணி, தண்டாயுதபாணி பாதம் பணிந்து ஓம் குமராயநமஹ: தண்டாயுதபாணிக்கு ஹரோஹரா, என்ற திருநாமம் மறவாமல், சதாநினைத்து, துதித்து தியானித்து, ஜபிதது பக்தியுடன் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய், தைரியம் துணைகொண்ட திவ்வியபக்த ஓங்கார மானிட குருபக்தி சத்தியசாதன திவ்வியமங்கள சதானந்த பிரபுநெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

52. ஓம் மதனோல்லாச மோகினியை நம:

பெண்ரூபம் பெரியரூபம், சத்திரூபம் தேவர் ஞானி முதல் தியானிக்கும் தேவி ரூபம், தாய், தமக்கை, தங்கை, மகள் ரூபம், உன்னைக்கட்டி அணைந்து சுகம்தரும் உன்காதலி சத்திரூபம் அறிந்து நீ ஆசைதள்ளு நில்லு ஒரு நிலை அறிந்து உறுதிகொண்டு நம்பும் நல்ல சத்திய ஞான உத்தமகுண திவ்விய பக்த மங்கள நெஞ்சே.

திருப்பரங்குன்றம் வேல்முருகர் தியானம்.

53. ஓம் குருகுஹாய நம:

வலைவிசி உயிர்கேளும் காலம் என் செய்வாய். ஆசையடக்க அறியாமல் அழுது, நொந்து, பேசி, தெளிவு இராமல், நெஞ்சம் முலைந்து, மருண்டு, பூதசுவாசமும் நின்று மாழ்கின்ற நெஞ்சே அறிவாய். திருப்பரங்குன்றம் தனில் வாழும் சுந்தரவேல், கும்ப வேல், நடனவேல், நாகவேல், மகவேல், விஸ்வவேல், வேதவேல், விருத்தவேல், பஞ்சவேல், கபடவேல், இராமலிங்கவேல், பௌத்த வேல், பரமவேல், ஐதீகவேல், சோமவேல், சந்திரசேகரவேல், கௌதபிரபுவேல், சுந்தரசதாசிவஸ்வரூபவேலனை, சாம்பசதாசிவ

திருப்பரங்குன்றம் வேல்முருகர் தியானம். (தொடர்ச்சி.)

வேலனை, நாதவேலனை, ரூபவேலனை, ஆத்மவேலனை, மஹாலிங்க வேலனை, மஹாசிவவேலனை, சத்திவேலனை, ஜோதிவேலனை, தங்க வேலனை, ஓங்காரவேலனை, பஞ்சவேலனை, சரவணபவ வேலனை, மலையைப்பிளந்த சத்திவேலனை, கூர்மைபொருந்தியகுன்றுவேலனை, சர்வ அசுரவீராதி வீரர்படையைக்கொன்று வெற்றிபெற்ற வீர வல்ல சத்திய ஞானக்கடவுளை, எக்காலத்துக்கும் இளம்பருவம் கொண்ட குமரன், குமரகுருபரன், வடிவேல்முருகனை, ரிஷப வாகனரின் குமாரனை, சத்து சித்து ஆனந்தனை, என்றும் அழியாத பரம்பொருளை, எங்கும் நிறைந்து, கண்பிரகாசம் தரும் சத்திய ஜோதிவேலனை, கடல் நடுவில் மரமாகி நின்ற சூரனைக்கொன்ற, சுத்த முருகக்கடவுளை, சர்வ ஆத்மாவிலிருக்கும் பஞ்சபூத பஞ்சக் குமரவேலனை, சர்வ தேவர்மனம் களிப்பு செய்து, தேவராஜனுக்கு மனம் ஆனந்தம் செய்த, பராசக்தி உக்கிரபட்டம்பெற்ற தங்க வேலனை, தெய்வநாயகியை விவாஹம்கொண்ட கலியாண வேலனை, ஈன்றளித்தளிக்கும் வல்லமையுள்ள திருமுருகனை, ஐந்து முகம் தோன்றி, பயத்தினுல் முகவாட்டம் தோன்றும் சத்தியபக்தனை, ஆதரிக்க ஆறுமுகமான ஆறுமுகக்கடவுளை, மாயோன் மருகனை, ஈசன் மகனை, ஒருகைமுகம் இளையவனை, வடிவேல் முருகனை, ஞானபண்டித வேலனை, மஹாதேவ வேலனை, குகையில் இருக்கும் வேல்முருகனை, சத்தியவேலாயுதனை, சத்திக்குமாரனை அனுதினம் மறவாமல் ஓம் குருக்குஹாய நம: நாகமயில் வேலுமுருகனுக்கு ஹரோஹரா, என்ற திருநாமம், சொல்லி, நினைத்து, துதித்து, தியானித்து ஜபித்து, பக்தியுடன் பூஜைசெய்து, எமபாசம்போக்கி, கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் சதாகலியாண கோலமா யிருக்கும் ஸ்ரீவள்ளிதெய்வநாயகியுடன், திவ்வியசுந்தர அலங்கார ஆனந்த, உத்தமபுருஷ ஓங்காரவேலனை, துணைகொண்ட சாந்தகுண மெய்ஞான அருள்வடிவு ஜோதிப்பிரகாச திவ்விய பக்தமங்கள சத்திய வாக்கு நித்திய தியான ஆனந்த குருபக்தி நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

54. ஓம் சர்வமாயா மோஹின்யை நம:

பெண்மாயா உன் கண்ணேக்கவரும் சொன்னேன். உன்னை யும் உன் இனத்தையும் தள்ளும் உன்னை மயக்கி தன் சபதம் பலிக்கச்செய்யும் பெண்ரூபமே கண்ணிருந்தும், இல்லாதவன் போல் தன் பின்னே வரச்செய்யும் பெண்மோகமே இது அறி வாய் பேதை நெஞ்சே.

சென்னை கந்தஸ்வாமி தியானம்.

55. ஓம் குருப்பிரபவே நம:

யோக சாத தியான ஞான சிந்தனை விட்டு சதாகாமமோக சிந்தனையில் மூழ்கியிருக்கும் மதனசொரூபனே, மோகமங்கையரைக் கண்டு மனது பொருமல் வாடித்திரியாதே ஆசை அடக்க அறிவாய். சென்னையில் வாழும் சுந்தர கும்ப நடன நாக கந்தஸ்வாமியை, மகவிஸ்வவேதஸ்வாமியை, விருத்த பஞ்ச கபடலிங்கஸ்வாமியை, பௌத்த பரம ஐதீகஸ்வாமியை, சோமசுந்தரஸ்வாமியை, சந்திர சேகர கௌதபிரபுஸ்வாமியை; சுந்தரசதாசிவஸ்வரூபஸ்வாமியை, சாம்பசதாசிவஸ்வாமியை, நாதரூபஸ்வாமியை, ஆத்மமஹாலிங்க ஸ்வாமியை, சிவலிங்கஸ்வாமியை, சரவணபவகுமரகுருபரஸ்வா மியை, ஆறுமுக பன்னிருகை வடிவேல்ஸ்வாமியை, ஞானபண்டித சத்திஜோதி தங்க ஓங்கார பஞ்சவேல்ஸ்வாமியை, தங்கமயமாயிருக் கும் பராசக்தி குமாரஸ்வாமியை, கந்தஸ்வாமியை, கண்குளிரக் கண்டு தரிசனம் பெறுவாய். காம மோக சோகபாசம் மறப்பாய ஞானம் நினைப்பாய் சத்தியதியானம் செய்வாய். ஆத்மசுகானந் தம் தரும் சுத்த சுந்தரசுகம் தரும் ஸ்கந்த, கந்தன், சாந்தகுண சத்தியவாக்கு ஓங்கார சதானந்த கந்தஸ்வாமியை, துணைகொண்ட விவேகபுத்தி ஞான அறிவு சத்தியவாக்கு சுத்தகுண ஓங்கார வீர புருஷ திவ்விய பக்தமங்கள குரு பக்திஞான ஓம் கந்தாய நம: கந்தஸ்வாமிக்கு ஹரோஹரா, என்ற திருநாமம் மற வாமல் அனுதினம் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தி யுடன் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய். உண்மை பக்தி சத்திய சதானந்த பிரமஞான அறிவு நெஞ்சே.

ஸ்ரீ குமரேசர் ஞானம்.

56. ஓம் சோமசூரிய அக்கினிலோசனய நம:

மாயா மயக்கம் போதைஉண்டு தேனைஉண்ட மதுகர வண்டு போல் கண்மூடி விழுந்து தட்டுத்தடுமாறி நடந்து வாயில் வந்தது பேசி மதிகெட்டு மனம் நொந்து பித்தனுகி அறிவு தெளிவுயிராமல் உயிருக்கு உணவு மறந்து உள்ளம்நொந்து ஒன்றும் தெரியாத மௌடீகபுத்திகொண்டு சதா விசாரத்துடன் பெண்டு பிள்ளையை மறந்து திரியாதே, சத்தியசாதனைகொண்டு மாயா மயக்கம் போதை வெறுத்து கடவுளை நம்பி காலம் கடத்துவாய் காரிய வீரிய சித்தி சுத்த வாக்கு துணைகொண்ட என்றும் மாறிப்பேசாத ஒரே புத்தியுடைய உத்தம சத்திய பக்த சாந்தகுண சாத்மீகம்கொண்ட திவ்விய பக்த ஓங்கார மானிட லெக்ஷுமி கடாக்ஷம் கொண்ட சுந்தர அலங்கார ஞானமங்கள சத்தியவாக்கு நெஞ்சே.

சுவாமிமலை சுவாமிநாதன் தியானம்.

57. ஓம் குமாராய நம:

எல்லாமறிந்து படித்துத் தெரிந்திருந்தும் மாயாஎன்னும்மண பெண் பொன்னுசை அடக்கவல்லை என்று கற்றுணர்ந்த கல்வி மறந்து பித்தம் பிடித்து நாறும் உடலை நம்பித்திரியாதே. சத்திய சாந்தமாயிருந்து கேட்டதெல்லாம் தரும் சுவாமி மலையில் வாழும் சுந்தரநாதனை, கும்பநாதனை, நடனநாதனை, நாகநாதனை, மகநாதனை, விஸ்வநாதனை, வேதநாதனை, விருத்தநாதனை, பஞ்சநாதனை, கபடநாதனை, இராமலிங்கநாதனை, பௌத்தநாதனை, பரமநாதனை, ஐதீகநாதனை, சோமசுந்தர நாதனை, சந்திரசேகர நாதனை, கௌதபிரபு நாதனை, சுந்தரசதாசிவஸ்வரூப நாதனை, சாம்பசதாசிவ நாதனை, நாதநாதனை, ரூபநாதனை, ஆத்மநாதனை, மஹாலிங்கநாதனை, மஹா சிவலிங்கநாதனை, பிரம்மாவுக்குத் தலைவரான பிர்மநாதனை, சாம்ப சதாசிவனுக்கு ஓங்கார மந்திர அர்த்தம் சொன்ன ஞானபண்டித நாதனை, மஹாதபரிஷி ஞான யோக நாதனை, தேவ சேனுதிபதி நாதனை, சொந்தஞானம் உள்ள நாதனை, குகையில்வசிக்கும் நாதனை,

சுவாமிமலை சுவாமிநாதன் தியானம். (தொடர்ச்சி.)

சர்வதீர்த்த அபிஷேகநாதனை, சர்வவாசனைத்திரவிய தைல சந்தண அபிஷேக நாதனை, பஞ்சாமிர்தகம் பன்னீர் பால் அபிஷேகநாதனை, விபூதி அபிஷேக நாதனை, சர்வ ஆடையாபரணலங்கார நானுவித புஷ்பம்தரித்த சந்தண திலக அலங்காரநாதனை, சதாசர்வநைவேத்திய தீவாராதனை பூஷணைகள் பெறுகின்ற நாதனை, சத்திஜோதி ஓங்கார பஞ்சகுமர வேலுமயிலும்துணைகொண்ட நாதனை, சதாகுகையிலிருக்கும் சத்தியநாதனை, மஹாதேவ சற்குருநாதனை, சுவாமிநாதனை, மறவாமல்நினைத்து துதித்து தியானித்து ஜபிதது ஆத்மசுத்தியுடன் பக்தியாய் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய். ஓம் குமாராயநம: சுவாமிநாதனுக்கு ஹரோஹரா என்ற திருநாமம் மறவாமல் கனவிலும் நினைவிலும் உணவிலும் தியானித்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய். சத்தியவாக்கு ஜகத்குருவை, சற்குருவை, சங்கரகுருவை, குமரகுருவை துணைகொண்டு என்றும் அழியாத வஸ்துவாய் இருப்பாய். உத்தம சாந்தகுண ஓங்கார மந்திர மூலப்பொருள் அறிந்த திவ்விய மங்கள குருபக்தி சதானந்த சத்திய நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

58. ஓம் இரவியவர்ண்ணய ஸ்ரீகுமாரேசாய நம:

பணமென்ற ஆசைகொண்டு திரிந்து பிணமாகும்வரை பொய் பேசி பல்லைக்காட்டித்திரியாதே மானமழிந்து மதிகெட்டுமடியாதே சத்திய தியானம் செய்தால் மனம் மஹானந்தம் தரும் யோக சாதனை செய்யும் பணம் தரும் பாசம் விலகும் ஞானம் தரும் ஷண்முகனை அறிவாய் அஞ்ஞான நெஞ்சே.

சிவ ஷண்முகன் தியானம்.

59. ஓம் குருப்பிரபவே நம:

பார்த்தாலும் பசிதீரும் நினைத்தாலும் கேட்டாலும் நின் கருணை உள்ளம் குளிரும் படித்து சொன்னாலும் பாசம் விலகும்; ஆடிப் பாடித்துதித்தாலும் ஆனந்தம் தரும்; ஊண் உறக்கத்தில் உணர்ந் தாலும் உண்மை ஞானம் தரும் தித்திக்கும் இனித்த சுவைக் கரும்பே, கண்மணே, கருமணியே, கனிந்த, நறுங்கனியே, சீனிகற் கண்டே அமுதே அருள்தரும் பொருளே செல்வமே சற்குருவை சுந்தரமுகனே,கும்பமுகனே நடனமுகனே நாகமுகனே மகமுகனே விஸ்வமுகனே வேதமுகனே விருத்தமுகனே பஞ்சமுகனே கடப முகனே லிங்கமுகனே பௌத்தமுகனே பரமமுகனே ஐதீகமுகனே சோமமுகனே சந்திர சேகரமுகனே கௌதபிரபுமுகனே சுந்தரசதா சிவஸ்ரூபமுகனே சாம்பசதாசிவமுகனே நாதரூப ஆத்மமுகனே மஹாசிவலிங்கமுகனே சர்வசிவமுகனை மஹாதேவகுருமுகனை ஷண்முகனை நாகமயில் ஆறுமுகனை பன்னிருகையனை வடிவேல் முருகனை ஞானபண்டிதனை ஜோதிபிரகாச திவ்வியமங்களரூபனைமற வாமல் ஓம் குருப்பிரபவே நம: ஷண்முகனுக்கு ஹரோஹரா என்ற திருநாமம் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தி யுடன் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய்பணம் பொருள் பெருவாய் ஞான அறிவு துணைகொண்ட சத்திய குரு பக்த ஆனந்த திவ்வியமங்கள சுகலாபநெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

60. ஓம் குரவே நம:

வேசம் கொண்டு ஞானியென்று சாமியென்று மௌனியாகி திரியாதே பாடுபட்டுதேடி கல்விகற்றுணர்ந்து அறிவாய் கடவுளை என் கற்பகநெஞ்சே.

நாகமயில்வாகனன் தியானம்.

61. ஓம் குருச்சிவாய நம:

உயிர் போகும்வரை தன்தெய்வம் என்தெய்வமென்றும் வழக்கிடவும், அன்னம் புசிக்கவும், மோகத்தால் முற்றும் மறந்து தன் காதலியைகட்டி அணைத்து சுகித்து தூங்கவும் அன்னசொர்ன்ன விசாரத்தால்அழுதுநொந்து அலையவும் கண்டதேயன்றி ஒருபயனும் அடைந்ததே இல்லை. உன்னை அறிவதே ஞானம் என்சற்குருவே சுந்தரமயில் கும்பமயில் நடனமயில் நாகமயில் மகமயில் விஸ்வமயில் வேதமயில் விருத்தமயில் பஞ்சமயில் கபடமயில் லிங்கமயில் பௌத்தமயில் பரமமயில் ஐதீகமயில் சோமமயில் சந்திரசேகரமயில் கௌதபிரபுமயில் சுந்தரசதாசிவஸ்வரூபமயில் சாம்பசதாசிவமயில் நாதரூபமயில் ஆத்மமயில் மஹாசிவலிங்கமயில் சர்வசிவமயில் மஹாதேவகுருமயில் மயில்வாகன சுப்பிரமண்ணிய சுவாமியை, நினைத்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் ஓம் குருச்சிவாய நம: மயில்வாகன சுப்பிரமண்ணியனுக்கு ஹரோஹரா, என்ற திருநாமம் மறவாமல் நினைவிலும் கனவிலும் உணவிலும் தியானிப்பாய் அஞ்ஞான இருளைபோக்கி மெய்ஞானபிரகாசம் பெருவாய் குருபக்தி கருணை குடிகொண்ட கற்பகநெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

62. ஓம் பராசத்தியை நம:

பெண்ணைகண்டு உன்மனம் புண்கொண்டு புத்திகெட்டு தட்டு தடுமாறி சதாநினைவுகொண்டு வாடாதே. காமவெறி அடக்கியாளும் காமகுரோத அஞ்ஞான மாயாமானிட நெஞ்சே.

ஸ்ரீவள்ளி தெய்வநாயகி நாதன் தியானம்.

63. ஓம் லோககுரவே நம:

பார்க்கக்கண்ணுண்டு துதிக்கக்கருத்துண்டு பேசநாவுண்டு உம்மை அறிய ஞானமுண்டு எல்லாமிருந்தும் உலக சூது வாது பொய்பாசத்தால் பயந்து பதுங்கி தெளிவுயிராமல் திரிகிறேன்.

உம்மைக் கண்குளிரக்கண்டு என் கரங்கள் பாதங்கள் மாற்பு நெற்றி புஜங்கள் பூமியில் படும்படியாக சாஷ்டாங்க நமஸ்கார வந்தனம் செய்கிறேன். எங்கும்நிறைந்த என் ஞான சத்தியே, சுந்தர நாயகி, கும்பஅரூப நாயகி, நடனநாயகி, மகநாயகி, விஸ்வநாயகி, வேத நாயகி, விருத்த நாயகி, பஞ்ச நாயகி, கபட நாயகி, லிங்க நாயகி, பௌத்தநாயகி, பரமநாயகி, ஐதீகநாயகி, சோமப்பிரகாச நாயகி, சந்திரசேகர நாயகி, கௌதப்பிரபு நாயகி, சுந்தரசதா சிவஸ்வரூப நாயகி, சாம்பசதாசிவநாயகி, நாதநாயகி, ரூபநாயகி, ஆத்மநாயகி, மஹாலிங்கநாயகி, மஹாசர்வ சிவலிங்கநாயகி, மஹாதேவீம் பஜே சற்குரு நாயகி, ஸ்ரீ வள்ளி தெய்வ நாயகி சமேத சுப்பிரமண்ணிய சுவாமி பாதம் பணிவாய். அருட்பெரும் ஞானப்பொருள் பெருவாய். ஓம் லோககுரவே நம: ஸ்ரீ வள்ளி தெய்வ நாயகி சமேத சுப்பிரமண்ணியனுக்கு ஹரோ ஹரா என்ற திருநாமம் மறவாமலும் இரவும் பகலும் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜை செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் பேரின்ப ஞானம் துணைகொண்ட குருபக்தி ஞான நெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானம்.

64. ஓம் ரோகநாசாய நம:

காடு மலை வனம்போய் கடுஞ்சிங்கம் புலியை எதிர்க்கலாம், கல் யானை பெரும்வேங்கையை சுமக்கலாம், காசு பணம் சேர்க்கலாம், பெரும்கோட்டை கோவில் கோபுரம் வீடுவாசல் கட்டலாம், சகல கல்விகற்றுணர்ந்து ஞானம் அறியலாம், கண்ட உணவு உண்டு களிக்கலாம், மந்திரஜபத்தால் மலை உச்சியில் உறங்கலாம், காடுமலைவனம் கண் தெரியாத பனியில் வசிக்கலாம், உண்மையுடன் உணவு உறக்கம் காமநினைவு மோகஆசை விட்டு சிந்தையடக்கியாளுவதே அறிது. நித்தியம் சத்தியதியானம் செய்து அறிவாய் ஸ்ரீபிர்மா விஷ்ணு சிவபக்த ஞானநெஞ்சே.

ஸ்ரீகுமரேசர் ஞானதியானம்.

65. ஓம் அக்கினிஜன்மனே நம: ஓம் ஓங்காராய நம: ஓம் குருப்பிரபவே நம: ஓம் ஸ்ரீகுமாரேசாய நம: ஓம் குரவே நம: ஸ்ரீகுமரேசர் நமோ நம:

ஓம் தத் ஸத் சற்குருவை சிவகுருவை குமரகுருவை ஏக நாயகனை தைரியஞாபக சத்தியை தேவகுமரராஜனை என்குருவை என்ஞான சத்தியை என் அப்பனை என் ஆண்டவனை என்ஞான குருவை என்னுயிரை என் தியானகுருவை சத்திய்குருவை சதா பக்தன் மனதில்குடிகொண்ட பரமதயாளகுருவை என் கண்ணொளிபிரகாசம் தரும் எங்கும் நிறைந்த ஜோதியை என் அறிவை தரும் அன்புள்ள குருவை ஐயனை அனுதினம் சர்வ அபிஷேக அலங்காரம் செய்து நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜைசெய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் என் புண்ணிய புருஷ சத்திய குருபக்த ஞானஅறிவு துணைகொண்ட திவ்விய பக்த மங்கள சத்தியவாக்கு நெஞ்சே.

சற்குரு ஸ்ரீகுமரேசர் தியானம்.

66. ஓம் குருப்பிரபவே நம. ஓம் குமாராய நம: ஓம் குரவே நம:

ஸ்ரீகுருமுருகா ஆறுமுகா பன்னிருகையா வேலுமயிலும்துணை கொண்ட ஞானக்கண் ரிஷபவாகனரின் குமாரா போற்றி, அக்கினியில் தங்கமயமாய் பிறந்த பராசத்திபட்டம்பெற்ற சத்திவேலா தண்டாயுதபாணியே போற்றி, சிவரூபா, பிரம்மரூபா, எங்கும் நிறைந்த ஆகாயஜோதியே, கந்தனே, ஸ்ரீவள்ளிதெய்வநாயகிநாதா, போற்றி, ரத்தரூபா,சிவமங்களரூபா,கிழரூபா, வீரரூபா, ஸ்ரீவள்ளி மணுளா, போற்றி, திருமூர்த்தி அம்சம்கொண்டு உடனே பிறந்த விந்துநாதனே போற்றி, தேவர்தலைவன் கூட்டத்தலைவன், தாய் தந்தை தலைவன், உயிர்தலைவன், பிர்மாவுக்கு தலைவன், கருணைஞான கடல்பிரபுவே, சுவாமி நாதா போற்றி, மலை குகை வாச சத்திய சுத்தஞானயோகி சதாஞான சிந்தனு போற்றி, கார்த்திகை பாலா சுத்தஞான வேலா தயாளகுணு அனுதிரக்ஷகா தபயோகிநேசா

சற்குரு ஸ்ரீ குமரேசர் தியானம். (தொடர்ச்சி.)

தாரகமந்திர அருள்கொண்ட தேவசேனாதிபதி தீனதயாளா சொந்த அறிவு ஞானபண்டிதா சுவாமி நாதா போற்றி, பக்தர்களைக்கொண் டாடும் பார்வதி பாலபிரபுவே சேனைத்தலைவா சிவஷண்முகநாதா போற்றி, சமுத்திர கங்கா சத்திபராசத்தி சர்வசத்தி விசாகநக்ஷத் திரக் குமரா ஞானப்பிரகாச ஜோதியே போற்றி, விபூதி அலங் காரா நவக்கிரக அலங்காரதேவனே சர்வ சத்திவல்லபா என்றும் அழியாத குமர இளம்பருவம்கொண்ட ஆதிதேவ நாகமயில் வாகனா போற்றி, ஓமகுண்டம் அக்கினிதேவனே ஒரே வடிவு அழகு தங்கபளபளப்பு ஜோதியே கிரீடம் தரித்த சத்திவல்லபா ஸ்ரீவள்ளிதெய்வநாயகி நாதா போற்றி, விஷ்ணு சிவகளை பொருந் திய இருநிறத்தோனே சர்வதீர்த்த அபிஷேக ஆடையாபரண அலங்காரா சர்வதீப ஆராதனைக்குமரா திருமூர்த்தி அம்சம்பொருந் திய சதா ஞானசிந்தனா பக்தரக்ஷகா எங்கும் நிறைந்த பிரபுவே ஞானவடிவே திருமணிமுத்தாநதி விருத்தாஜலவாசனே வேலு மயிலும் ஸ்ரீவள்ளிதெய்வநாயகி சமேதா ஸ்ரீகுமரேசா சற்குருவே போற்றி, தங்கநிறமுடன் நற்செய்கை கொண்ட சர்வ ஆபரண பூஜிதா மாயைஜயித்த ஆத்மசுயரூபனே வேலுமயில் ஸ்ரீவள்ளி தெய்வநாயகிநாதா ஸ்ரீகுமரராஜாபோற்றி சுத்தவெள்ளை சைதன்ய அறிவு வெள்ளிமலைப்பிரகாசா ஆத்மசொரூபா பிரம்ம ஞானயோக சாதனா சொந்தஞான சூரியசந்திரப்பிரகாசா இந்திரஜாலமாயை வென்ற சிரேஷ்டமான ஞானி ஆசைவெறுத்து முடிவற்றநிஷ்டையில் இருக்கும்சதாசிவஸ்ரூபம் ஆலிலை ஆசனம்கொண்டு ஞானத்திலிருக் கும் தக்ஷிணாமூர்த்திதெய்வமான ஜெகத்குருவேபோற்றி, சர்வஜீவ விருத்திசெய்யும் ஜீவரக்ஷகா சாந்தகுண சங்கீதப்பிரியா வேதப் பொருளே சத்தியஞானவாக்கு கேட்டதைத்தரும்தயாளகைசற்குரு ஸ்ரீகுமரேசர் பாதம்போற்றி, சர்வரோக சம்மார புத்திரசந்தானம் தரும் ஞானபண்டிதா எங்கும் நிறைந்த குமரகுருபரன் குமரன் சோகமோகலீலாவிநோதா சர்வமாயா அறிந்த சற்குரு ஸ்ரீகுமரேசர் பாதம் போற்றி, மழுங்காத ஜீவஒளிபெற்ற எங்கும் நிறைந்த சுரூபா அரூபா விஸ்வரூபா தூணிலும் துரும்பிலும் நிற்கும் ஏகநாயகா

சற்குரு ஸ்ரீ குமரேசர் தியானம். (தொடர்ச்சி.)

எலுமிச்சை சர்வதீர்த்த தைலசந்தன பால் பன்னீர் விபூதி அபிஷேகப்பிரியா வெள்ளிமலையில் சதாநிஷ்டையிலிருக்கும் சதாஞான சிந்தனை கேட்டவரம் தரும் கற்பகவிருக்ஷதேவனே பக்தரக்ஷகா சர்வசித்திதரும் வீரவல்லபப்பிரபுவே சதாபஞ்சகுமர வேலுமயிலுடன் ஸ்ரீவள்ளி தெய்வநாயகி சமேதனய் விளங்கி பக்தன் மனம் களிப்பு செய்யும் ஓம் நமோ ஸ்ரீஞானசத்தி ஓம் குமாரேசாய குரவே நம: என்ற திருநாமம் மறவாமல் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியுடன் பூஜைசெய்ய அறிவு புத்திதரும் ஞான யோகி சற்குரு ஸ்ரீகுமரேசர் பாதாரவிந்தம் அடித்தாமரை போற்றி போற்றி.

ஓம் தத் ஸத்

67. வேலுமயிலும் சற்குருவும் துணை.

ஓம் குருப்பிரபவே நம: ஓம் குமாராய நம: ஓம் குருச்சிவாய நம:
ஓம் குருக்குஹாய நம: ஓம் குமாரேசாய நம: ஓம் குரவே நம:
ஓம் ஸ்ரீ குமரேசர் நமோ நம:

சற்குரு ஸ்ரீகுமரேசர் ஞானஜோதி திவ்வியதியானம்.

சர்வ அலங்கார அழகு பொருந்திய ஞானவீடு நீயே, உற்சாக யோகவரம் தியானகுகை சிவந்தஜோதிநீயே, சதாஞானசிந்தனையாய் இருக்கும் யோகபாணசாதனே நீயே, எக்காரியத்திற்கும் ஜெயம் தரும் காரணக் கடவுள் நீயே, சதாபுன் சிரிப்பு வேலாயுத பொன் தேஜசு நிறைந்த ஒளிப்பிரகாச சுத்தஞானி வெட்டவெளி கடவுள் நீயே, அக்கினிஜுவாலா அக்கினியில்பிறந்த சத்திபுத்திரன் உக்கிர சத்தி அங்காரதேவன் நீயே, ஏகமுகம் ஒருகை இருதந்தம் விக்னராஜரின் இளையவன் ஆறுமுகன் பன்னிருகை வடிவேலன் நீயே, மேன்மை பொறுமை பொருந்திய கண் அழகு கடவுள் நீயே, மும்மூர்த்தி உருவம் பொருந்திய கலியுக கடவுள் நீயே, சர்வ வேதபுராண சாஸ்திரக்கல்வி ஞானம் நிறைந்த கடவுள் நீயே, திருமால் முருகன் குமரன் ஏகதேவன் கணபதி சிவனும் நீயே, மெய் சத்தி வாக்கு நிறைந்த கருணை ஆனந்தக்கடவுள் நீயே, காளபைரவர் பிர்மா விஷ்ணு பெருமாள் நீலவர்ணக்கடவுள் நீயே, அக்கினி

சற்குரு ஸ்ரீ குமரேசர் ஞானஜோதி திவ்வியதியானம். (தொடர்ச்சி.)

ஜுவாலையாயிருக்கும் சர்வசத்திக் கடவுள்நீயே, என்றும் அழியாத பொருள் இளம்பருவம்கொண்ட ஸ்ரீகுமரேசக்கடவுள் நீயே, சதா ஆனந்தமாயிருக்கும் கவலை இல்லாத ஞானக்கடவுள் நீயே, பதினாலுலோகம் எங்கும் நிறைந்து இருக்கும் கடவுள் நீயே, சர்வ கிரீடம் பட்டம்பெற்ற தேவராஜன் நீயே, சரஸ்வதி அச்சரரூபன் கல்வி சாஸ்திர புராணக் கடவுள் நீயே, எங்கும் நிறைந்து சர்வ ஜீவனுக்கும் படிஅளக்கும் பொன் தங்கம் வெள்ளி நீயே, நிழல் தரும் தெய்வம் நீயே, கண்ணில் குடியிருக்கும் பிரதிபிம்பம் நிழல் நீயே, வரும் காரியம் சொல்லும் புரோகித தேவனும் நீயே, சாமவேதஞான பாடல் நீயே, சர்வ அபிஷேக அலங்காரம் பொருந்திய கடவுள்நீயே பராசத்தி இளையகுமாரன் குமரன் முருகேசர் நீயே, சர்வ சித்து அறிவு அருகன் சிவன் வயிரவன் பிரமஞான யோகி சாதுசந்நியாசி பண்டித சிவபூதகண அதிபதி அறிவு கடவுள் நீயே, புத்திரசந்தானம் தரும் தெய்வம் நீயே, ஐந்து அறிவு நீயே, எங்கும் நிறைந்து இருக்கும் பெரியகடவுள் மஹாதேவசற்குருவும் நீயே, வெள்ளிமலை கைலாசலிங்கம் பரமேஸ்வரர் சர்வலிங்க பிர்மம் நீயே, ஞானயோகானந்த பிரமானந்தம் பரமானந்த சிவபிர்மம் நீயே, சத்து சித்து ஆனந்தம் சச்சிதானந்தம் நித்தியானந்தம் எங்கும் நிறைந்த சதானந்தபிரமமயமாய் பதினாலு லோகமும் நிறைந்த கடவுள் நீயே, பிரகாசம் பொருந்திய கிரணம் ஒளி கதிர் பரப்பும் கருணைக்கடல் நீயே, நீதிவைராக்கிய சாதனை ஞாபகசத்தி ஞானசத்தி சித்தாசத்தி சித்திபுத்திர சந்தானம் தனம் தரும் தைரிய மஹாஆனந்தம் நீயே, எங்கும் ஸ்ரீவள்ளிதெய்வநாயகி சமேதராய் நாகமயில் பஞ்சகுமரவேல் தரித்து தங்கியிருக்கும் சுப்பிரமணியக் கடவுள் சற்குரு நீயே, சற்குரு ஸ்ரீகுமரேசர் திருவடி பாதாரவிந்தம் அடித்தாமரை சதா மறவாமல் நினைவிலும் கனவிலும் உணவிலும் ஞானத்திலும் அச்சர எழுத்திலும் உயிரிலும் நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய் பூஜை செய்து கருத்துக்கிசைந்த காரியசித்தி பெருவாய் எங்கும் நிறைந்து கண்பிரகாசம் தரும் கடவுள் சற்குரு ஸ்ரீகுமரேசர் சதாநந்த ஞானம் என்றும் அழியாத அங்கஉடல் உயிர்துணைகொண்ட பிரமஞான யோகி சாது சந்நியாசி பண்டித பாமர ஏழைஜன சுகாநந்த சுத்த வாக்கு திவ்விய பக்தமங்கள ராஜ நெஞ்சே.

68. ஓம் தத் ஸத்

கடவுள் எங்கும் பிரமமயம் ஞானி எங்கும் பரப்பிரமமயம்
சத்தியவான் எங்கும் சுத்தபிரமமயம்

சற்குரு ஸ்ரீகுமரேசர் தியானம்.

ஓம் குமாராய நம: ஓம் குருப்பிரபவே நம: ஓம் குமாரேசாய நம:

ஓம் தத் ஸத் என்ற பிரமமந்திரமூல பொருளே சத்திய பரப்பிர்மம் நீயே, சச்சிதானந்த சைதன்னியஸ்வரூப பிரமசத்திய புருஷர் நீயே, ஞானக்கண்ணல் எங்கும் பரிபூர்ணசச்சிதானந்த சைதன்னியம் காட்டும் கடவுள் நீயே, சராசரி பிரபஞ்சமுழுதும் ஞானஸ்வரூப பிர்மத்தால் பார்க்கும் ஸ்ரீபிர்மா விஷ்ணு சாம்ப சிவனும் நீயே, அனுதினம் அகிலாண்ட கோடியெல்லாம் ஜோதிப் பிரகாசமாய் தோன்றி ஜெகத்தைரக்ஷிக்கும் சூரியபகவானும் நீயே, சர்வசாபதோஷ பாபபீடை கன்மபபவியாதி திருஷ்டி கோபஅகங் கார கர்வபந்தபாசம்போக்கும் நவக்கிரகங்களும்நீயே, சம்சாரமாயா வொட்டாமல் வைராக்கியம் உண்டுபண்ணுவதும் நீயே, தேகம் கோவிலாகவும் ஜீவன்கடவுளாகவும் தியானிக்கச்செய்து தீர்க்காயுள் தனம், தைரியம், சத்தியம், புத்திரசந்தானம், லக்ஷ்மிகடாக்ஷம், கல்வி, புத்தி, ஞாபகம், பக்தி, நிஷ்டை, சித்தாசத்தி சித்திவைராக் கிய சாதனை ஞானம் ஆனந்தம் ஞாபகசத்தி ஞானசித்தி மௌன சாதனை கருத்துக்கிசைந்த காரியசித்திதரும் சற்குரு நீயே, என் சற்குருவே கற்பகமே கற்பகவிருக்ஷமே ஸ்ரீவள்ளிதெய்வநாயகி நாக மயில் பஞ்சகுமரவேலாயுதம்கொண்ட ஓங்கார ஞான சத்தி ஜோதிரூபனே எங்கும் நிறைந்தஜோதியே சுந்தரகுருவே கும்ப குருவே, நடனகுருவே, நாககுருவே, மககுருவே, விஸ்வகுருவே, வேதகுருவே, விருத்தகுருவே, பஞ்சகுருவே, கபடகுருவே, லிங்க குருவே, பௌத்தகுருவே, பரமகுருவே, ஐதிககுருவே, சோம குருவே, சந்திரசேகரகுருவே, கௌதபிரபுகுருவே, சுந்தரசதாசிவ ஸ்வரூபகுருவே, சாம்பசதாசிவகுருவே, நாதகுருவே, ரூபகுருவே, ஆத்மகுருவே, மஹாலிங்ககுருவே, சர்வசிவகுருவே, மஹாதேவ சற்குருவை குருப்பிரபுவை நினைவிலும் கனவிலும் உணவிலும் அறிவுஞானத்திலும் அச்சரரூபஎழுத்திலும் உயிரிலும் பக்தியாய் அனுதினம் சதாநினைத்து துதித்து தியானித்து ஜபித்து பக்தியாய்

சற்குரு ஸ்ரீ குமரேசர் தியானம். (தொடர்ச்சி.)

பூஜைசெய்து ஓம் நமோ ஸ்ரீ ஞானசத்தி ஓம் குமாரேசாய குரவே நம: என்ற திருநாமம் சொல்வாய். மனம் மஹானந்தம் பெருவாய். ஞாபகசத்தி ஞானசத்தி சித்தாசத்தி சித்தி ஞானம் பெருவாய். புத்திரசந்தானம் தனலாபம் ஆனந்தம் தரும் சத்தியஞானி ஸ்ரீ குமரேசர் சற்குருவை குமரமுருகக்கடவுளை குமரராஜனை ஸ்ரீ குமரேசரை துணைகொண்ட சத்தியதர்ம ஜீவகாருண்ய உத்தம உண்மை ஞான சததிய குருபக்தி திவ்விய பக்தநெஞ்சே. சத்தியகுருஸ்ரீ குமரேசர் திருவடி பாதாரவிந்தம் அடித்தாமரை பாதம்பணிவாய. சற்குருபக்தி உத்தம புருஷ வைராக்கியவீர சாந்தகுண சதானந்த ஞான அறிவு துணைகொண்ட ஓங்கார ஞானசத்தி பஞ்ச குமரவேல் துணைகொண்ட நெஞ்சே. சோமவாரம் கார்த்திகை உபவாசம் மறவாமல் இருந்து கடவுளை தியானித்து பிரம தரிசனம் பெருவாய் சுகமுடன் இருப்பாய் சத்திய குருபக்தி திவ்விய பக்தமங்கள நெஞ்சே. சுபம். மங்களம். ஓம் பஞ்சாக்ஷர சடாக்ஷர சிவசாந்தி.

ஓம்

ஓம் விநாயகாய நம: சற்குரு ஸ்ரீ குமரேசர் ஓம் கணநாதாய நம:

நமோ நம: ஹரோ ஹரா.

69. தண்டாயுதபாணி துணை.

ஓம்

உ—என்ற உயிர் எழுத்து தியானம்.

உ, என்றால் என்ன? ஏன்? எங்கும் உ, மயம்.

உ, உயிரானாய், உடலானாய், உலகமானாய், வானாய், நிழலானாய், கடலானாய், மலையானாய், தானாய், நானாய், எங்கும் நீயானாய், ஓம் என்ற பிரணவஸ்வரூபனானாய், ஓம் என்ற ஓங்கார மந்திரமானாய், ஓம் என்ற ஓங்கார மூலமந்திரப்பொருளானாய், சர்வ சத்தி ஞானசத்தி மண் பொன் பெண் சர்வ வல்லமை சத்திதேவி நீயானாய், கணேசவிக்கினராஜனும் நீயானாய், பிர்மா விஷ்ணு சாம்பசிவ மும்மூர்த்தியானாய், சர்வ பிரமஞானயோகி சாது சந்நியாசி பண்டித பாமர சிவபூதகணம் பஞ்சபூதம் ஓங்கார ஜீவன் வாதபித்த சிலேட்டுமம் நாடிரூபனாகி பொதுவில் நடனமாடும் சர்வசத்தி

உ என்ற உயிர் எழுத்து தியானம். (தொடர்ச்சி.)

உக்கிரரூபன் நீயானுய், ஓம் தத்ஸத் எங்கும் (உ) ரூபம். தண்டாயுத பாணி வேல்முருகன், கந்தஸ்வாமி, சுவாமிநாதன், ஷண்முகன், மயில்வாகனன், ஸ்ரீ வள்ளி தெய்வ நாயகி நாதன், சரவணபவன், குமரகுருபரன், குமரராஜன், ஆறுமுகன், பன்னிருகையோன், வடிவேல்முருகன், முருகக்கடவுள், சுப்பிரமணியன் சற்குரு ஓங்கார ஞானசத்தி ஜோதியாய் விளங்கும் தங்கவேல், ஜோதிவேல், சத்திவேல், ஓங்காரவேல், பஞ்சவேல், தங்கமயமாயிருக்கும் பராசத்தி பட்ட குமாரன் சற்குரு சத்தியகுரு ஸ்ரீ குமரேசர் ஓங்கார ஞான சத்தி ஜோதியாய் விளங்கும் ஸ்ரீ வள்ளி தெய்வ நாயகி, நாகமயில் பஞ்சகுமரவேல் ஞானசத்தி ஸ்ரீ குமரேசர் கிருபை.

70. பக்தி என்பது என்ன?

தன் இஷ்ட கடவுளை நினைத்து துதித்து தியானித்து ஜபித்து பூஜை செய்தால் கடவுள் கருணை, கிருபை, அன்பு, அருட்பிரகாசம் பிரமதரிசனம் தருவார் கருத்துக்கிசைந்த வரம் தருவார். சர்வசுக ஆனந்தம் அடையச்செய்வார். ஓம் ஸ்ரீகணேசாயநம: ஓம்நமோ ஸ்ரீ பரப்ரம்ஹணே நம: ஓம் விக்னராஜாய நம: ஓம் நமோ ஸ்ரீ ஹரி ஹராய நம: ஓம் நமோ ஸ்ரீ குமாராய நம: ஓம் குருச்சிவாய நம: ஓம் குமாரேசாய நம: ஓம் குரவே நம: ஓம் நமோ ஹரி ஓம் நாராயணுய நமோ நம: ஓம் நமோஹரா ஓம் ஸாம்பசதாசிவாய நமோ நம: ஓம், ரீங், ஸ்ரீம், ஹரீம், ராம், ரீம் கிரீம் நமோ நம: ஹரோ ஹரா பிரமமயம், ஞானமயம், சத்திமயம், விஷ்ணுமயம், சிவமயம், அக்கினிமயம், ஸ்ரீ ஓம், ஹரி ஓம், ஹரா ஓம், ஓம் தத்ஸத் ஓம் ஸ்ரீ பிரமதேவா சரஸ்வதிதேவிம் பஜேகம். பிரமதேவன் ஏன் மானிடப் பிரவி சிருஷ்டித்தார்? அஞ்ஞான மாயா இருளைப் போக்கி ஞானப் பிரகாசத்தால் பாபகருமங்களைச்செய்யாமல் பரமாத்மாவை அறிந்து முக்தி அடையும்படி பஞ்சபூதங்களுடன் மானிடப்பிரவியைப்படைத்தார். தன் ஆத்மாவை துராசாரங்களைவிட்டு இந்திரிய நிக்கிரமுள்ளவனுகி மனதை ஒரு நிலையில்வைத்து ஒருமனதுடன் உள்ளம் ஞானமான ஸ்வரூபனுக இருந்து சத்திய தர்ம ஜீவகாருண்ய ஞானத்தினுலேயே கடவுளை தியானிக்கவேண்டும். ஓம் தத் ஸத்.

ஜீவகாருண்யம்.

சுவாமிநாதன் துணை.

71. ஓம் கணேசாயநம: ஓம் விக்கினராஜாயநம:

சற்குரு ஸ்ரீ குமரேசர் கிருபை.

ஜீவகாருண்யம் என்றால் கொலையும், புலையும், களவும், தவிற் குருடும், செவிடும், ஊமையும், நமக்கு ஆகாரம் எந்த வழியில் கிடைக்கும் பசி எப்படி நீங்கும் என்று நினைத்து துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரம்கொடுத்து துக்கத்தை நீக்குவதே ஜீவகாருண்யம். தன்னால் இயன்றவரை காசு பணங்கள் தருமம் செய்தல், உடுக்க வேஷ்டிகள் ஆடைகள் கொடுத்தல், சாந்தமாய்ப் பேசுதல், இதுதான் சத்திய ஜீவகாருண்யதருமம் என்பது உண்மை. கடவுள் எங்கும் பிரமமயம். ஓம் தத் ஸத்.

72. ஓம் கணேச விக்னேசாய நம:

குருசுவாமி துணை.

ஓம் சிவாய நம: ஓம் நடேஸ்வராய நம:

போற்றி யுறைக்கின்றேன் பொய்யென் றிகளாதீர்
நாற்றிசைக்கண் வாழும் நமரங்காள்—ஆற்ற
அருள் அப்பன் வருகின்றான் அருள்விளையாட் டாடுதற்கென்
றிப்புவியி லித்தருண மிங்கு. ஓம் தத் ஸத் ஜகத்.

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை.

திரு அருட்பிரகாச வள்ளலாரென்னும் வடலூர் ஸ்ரீ
இராமலிங்க சுவாமிகள் திருவடி போற்றி போற்றி.

73.

ஓம்நமோ ஸ்ரீ ஹரிஹராயநம: ஓம்நமோ ஸ்ரீ குமாரேசாயகுரவேநம:

ஐயனே யெனதுளேநின் றனது ஜென்மங்களாண்ட
மெய்யனே யுபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி
உய்யவே முத்திநல்கு முதவிக்கோ ருதவிநாயேன்
செய்யவே றென்றுங்காணேன் உந்தன் றிருவடி போற்றி போற்றி

(கைவல்லிய நவநீதம்.)

74. ஓம் நமோ ஸ்ரீ ஓம் கணேசாய நம: ஓம் விக்கினேசாய நம:

சிவமயம் தேஜோமயம் ஜோதிர்மயம் சதாசிவஸ்வரூபம்

சிவசங்கரன் துணை.

ஈசனுமா யருவாயுருவாகி யெழுந்தருளுங் குருவே
ஈசனு ஞானியு மொப்பென்றீரே யெப்படி யொப்பென்றால்
ஈசனு ஞானியு மமதையகந்ததினு லொப்பாம்
ஈசனுமாம் பலசீவருமா முலகெல்லா மிவனுமே.

ஞானி ஈசனுக்கு ஒப்பாவன்.

ஓம் தத் ஸத. (கைவல்லிய நவநீதம்.)

ஓம் மஹாகணபதி விக்கினராஜாய நம: ஓம் சித்திவிநாயகாய நம:

75. ஓம் குமாரேசாய நம:

பக்திக்குமர விலாஸ் சற்குரு ஞானசத்தி ஓம் குமாரேசாய குரவே

நமோ நம: ஓம் குமாராய நம: ஓம் குருச்சிவாய நம:

ஓம் குமாரேசாய நம: ஓம் குரவே நம: ஓம் குருப்பிரபவே நம:

ஓம் குருக்குஹாய நம: ஓம் ஸ்ரீ குமரேசர் நமோ நம:

அமரரிடர்தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி.

சரணஞ் சரணம் சரஹணபவ ஓம் சரணஞ் சரணஞ்

சண்முகா சரணம் ஓம் குமரசரணம் ஓம் குமாரா சரணம்.

ஓம் தத் ஸத். எங்கும் நிறைந்து கண் பிரகாசம் தரும் சுத்த அமிர்தம் திவ்ய பரஞ்ஜோதிப் பிரகாசமணி: சுப்பிரமணி, ஸ்கந்த மணி, கண்ணின் கருமணி, ஞானசூரியன், ஏகநாயகன், ஓம் தைரிய ஞாபகசததி, ஓம் தேவகுமரராஜா, ஓம் நமோகுரு ஓம் வேலாயுதா, ஓம் ஞானசத்தி, ஓம் மயில்வாகனு, ஓம் பராசத்தி, ஓம் ஜெகன் மாதா, ஓம் நித்தியக்கலியாணி, ஓம் கருணுதேவி, ஓம் கிருபாதேவி, ஓம் மஹாலக்ஷ்மி, ஓம் தனலக்ஷ்மி, ஓம் ராஜராஜேஸ்வரி, ஓம் பஞ்சாக்ஷர சடாக்ஷர சர்வஜீவ சத்தி ஸ்ரீ வள்ளி தெய்வ நாயகி சமேத ஸ்ரீகுமரேசகுரு சுவாமின் பாதாரவிந்தமே சரணம் சரணம் ஹரோஹரா நமோ நம;

ஸர்வாப்யோ தேவதாப்யோ நமோ நம. ஹரோ ஹரா.

சற்குரு ஸ்ரீ குமரேசர் அருள்வாக்கு.

நூல் ஞானதியானம் துதித்து நெஞ்சில் பதித்தோர்க்கு மோசனம், சர்வதுக்க நிவர்த்தி, சர்வ காரியசித்தி, புண்ணி ஞானம், புத்திரசந்தானம், தனம், செல்வம் மிகுந்து சுக னந்தம் தரும். சைதன்னியம் அறிவு கடவுளின் உண்மை பக்த னாகி கடவுள் கருணை அருட் பிரகாசம் ஞானம் பெற்று சுகமாய் ஜீவிக்கலாம். அஸ்தே நமஸ்தே ஜெகதம்பிகே மதுரேஸ்வரீம் ஸ்ரீ பாண்டிய பலாம் மீனாக்ஷிதேவீம் பஜே, ஜோதீஸ்வரீம் சுந்தரேஸ் வரீம் பஜே, மனோன்மணி சத்திதேவீம் பஜே, உக்கிரசத்திதேவீம் பஜே, சின்மயசத்திதேவீம் பஜே, சர்வசத்திதேவீம் பஜே, மாதம் தோறும் மும்மாரி பொழியக்கடவன. செழுமை பொருந்திய பூ வுலகம் செல்வம்மிகுந்து வாழக்கடவது. மன்னர் வாழ்க, மஹா ஜனம் வாழ்க, பிரமஞான யோகி சாது சந்நியாசி பண்டிதர் வாழ்க, பாமரர் ஏழை செல்வம்மிகுந்து வாழ்க, சித்தர் வாழ்க, பக்தன் வாழ்க, ஓம் ஸ்ரீ மஹாதேவ கற்பகவிருக்ஷமென்னும் ஸ்ரீகுமரேசர் ஞான ஜோதியாய் விளங்கும் ஸ்ரீ பிர்மா விஷ்ணு நவக்கிரக சிவத் தியானக்கடவுளின் திருவடி வாழ்க, பஞ்சாக்ஷர சடாக்ஷர சர்வஜீவ சத்தி வாழ்க, ஸ்ரீ வள்ளி தெய்வ நாயகி நாகமயில் பஞ்சகுமரவேல் வாழ்க, சற்குரு ஸ்ரீ குமரேசர் திருவடி வாழ்க வாழ்க.

ஓம் ஸ்ரீ மஹாதேவ கற்பக விருக்ஷமென்னும் ஸ்ரீ பிர்மா விஷ்ணு
நவக்கிரக சிவத்தியானம் முற்றுப்பெற்றது.

ஜெகத் எங்கும் கடவுள் பிரமமயம் ஓம் ஸ்ரீ பிர்மா விஷ்ணு
நவக்கிரக சிவசாந்தி கற்பகவிருக்ஷம் ஸ்ரீகுமரேசர் ஞான
ஜோதி நமோநம: ஹரோஹரா ஆனந்தஜெயமங்களம்.

சுபம். சுபம். சுபம்.

சற்குரு ஸ்ரீ குமரேசர் துணை. சுபமஸ்து. மங்கள[illegible]து.

600 008
178297

சி. எம். வி. பிரஸ், கீழவெளி வீதி, மதுரை:—1933.

"பக்திகுமர விலாஸ்"
K. மஹாதேவ அய்யர்
19, ஜடாமுனிகோவில்தெரு, மதுரை.